தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௫	மலர்
௪௰	குரோதி, ஐப்பசி, கார்த்திகை. 1964 அக்டோபர், நவம்பர்.	௭. ௮.

தமிழ் வாழ்க

கலைமகள் விழா.

நிகழும் குரோதி ஆண்டு புரட்டாசித் திங்கள் ௨௪, ௨௫ (10, 11—10—64) ஆம் நாட்களில் கரந்தைத் தமிழ்ப் பெருமன்றத்தில் கலைமகள் விழா நிகழ்ந்தது.

முதல் நாள் 10—10—64 சனி மாலை 5 மணியளவில் தமிழ்த் தாய் வணக்கத்திற்குப் பின் சங்கத் தலைவர் திரு. ச. சுயம்பிரகாசம் அவர்கள் அனைவரையும் வரவேற்று விழா நிகழ்ச்சிக்கு திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் பி. ஏ., எல். டி., அவர்களைத் தலைமை ஏற்று நடத்தித்தருமாறு கேட்டுக்கொண்டார்கள். விழாத் தலைவர் முன்னுரைக்குப்பின் திருமறை இசைச் செல்வி கோடிமங்கலம் திருமதி திலகவதியம்மையாரவர்கள் "இராவணனினும் வலிய நாயனார்" என்ற தலைப்பில் திருநாவுக்கரசரின் வரலாற்றினைச் சேக்கிழார் திருவாக்குக்களால் எடுத்துக்கூறி இடையிடையே அப்பரடிகளின் தேவாரங்களையும் இணைத்து இசையோடுபாடி உரை நிகழ்த்தினார்கள். பின்னர் சங்கத் தலைவர் இவ்யாண்டு கலைமகள் விழாவை இருபெருந் தமிழ்ப் பேராசிரியர்களைப் பாராட்டிச் சிறப்பிக்கு முகத்தான் சங்கம் கலைமகள் வழிபாடு நிகழ்த்த எண்ணியது என்றும் அவ்வாறே முதல் நாளில் மதுரைத் தியாகராயர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் உயர்திரு சி. இலக்குவனார் அவர்கள் பண்டாரகர் பட்டம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்தி சங்கம் மகிழ இருக்கிறது என்றும்கூறி இலக்குவனார் தம் சிறப்பியல்களையும் அவர் தம் புலமைத் திறனையும் நாடு நன்கறிந்துளது எனப் பாராட்டிப் பொற்பட்டாடை போர்த்துச் சிறப்பித்தார்கள். புலவர் ச. பாலசுந்தரம் சங்கச்சார்பில் பாராட்டியல் வாழ்த்துரை படித்தளித்தார்கள். அதன்பின் பண்டாரகர் அவர்களைப் பாராட்டி தஞ்சை P. S. வேங்கடகிருட்டின பிள்ளை, திருவையாற்று அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வி. அ. அரங்கசாமி; பூண்டி, புஷ்பம் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் கி. கோதண்டபாணி எம். ஏ., புலவர் கல்லூரிப் பேராசிரியர்கள் திரு. அடிகளாசிரியர், சி. கோவிந்தராசனார்; தஞ்சை, திரு. புலவர் R. ஏகாம்பரநாதனார். திரு. புலவர் தி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் பேசினார்கள். பாராட்டுரைக்கு நன்றிகூறும் வகையில் பண்டாரகர் பட்டம் பொதுமக்களின் மனநிறைவுக்காகவேயன்றி அதனைப் பெறுதலே தன் குறிக்கோளில்லை என்றும் தமிழுக்குத் தன்னாலான பணியை நடுவுநிலைமையோடு புரிதலே தன் கொள்கை என்றும் கூறினார்கள். மேலும் கரந்

தைத்தமிழ்ச் சங்கத்திற்கும் தனக்கும் உள்ள தாய்—சேய் உறவு பற்றியும் தன் உயற்சிக்கு சங்கம் புரிந்துள்ள உதவிபற்றியும் கூறித் தனக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தார் எந்நிலையில் இப்பட்டத்தினை அளித்தார்கள் என்றும் தொல்காப்பிய ஆராய்ச்சி எளிமையாகப் பிறர் ஏற்றுக்கொள்ளும் நிலையினதன்று அதுபற்றி முன் ஆராய்ந்து கண்ட அறிஞர்களின் கருத்துக்களை அடிப்படையிலே மறுத்துத் தக்க சான்றுகளுடன் நிறுவவேண்டிய சூழ்நிலை அமைந்ததென்றும் தொல்காப்பியச் சிறப்பியல்பை வேண்டுமென்றே மறைக்க முயன்றோர்க்கு இவ்வாராய்ச்சி பேரொளியாக வீசிநிற்கும் என்றும் தமிழின் தொன்மையையும் இலக்கண இலக்கிய மாண்பையும் நம் மக்கள் மறந்தால் தமிழகமேயன்றி பாரத நாடும் சிறப்படைய இயலாதென்றும்—தேசீய ஒருமைப்பாடு என்ற போர்வையிலே ஒரு மொழியே ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று கூறி இந்தியைப் புகுத்த இந்திய அரசு முயல்வது நடுவுநிலையாகாமையோடு கூட ஒற்றுமையைக் குலைப்பதற்கும் அதுவழியாகும் என்றும்—எப்படியாயினும் தமிழர் தம் தாய்மொழியைப் போற்றி ஊறுவரின் உயிர் கொடுத்தேனும் காத்து நிற்றல் வேண்டும்—தொல்காப்பியம்—திருக்குறள் ஆயபெருநூல்களின் உண்மைச் சிறப்பினை உலகறியத் தம்மாலான தொண்டுகளை எந்நிலையிலும் செய்வேனென்றும் கூறினார்கள். மேலும் தன்னுடைய ஆராய்ச்சி நூல்வடிவில் வர அச்சாகிறது அச்சானதும் தக்கார் தலைமையில் வெளியீட்டு விழா நிகழும் என்றும் கூறிச் சங்கத்திற்கும் பாராட்டிய ஏனைப் பெருமக்களுக்கும் விழாத் தலைவருக்கும் தன் உளங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும்கூறி முடித்தார்கள். பின்னர் விழாத் தலைவர் திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் அவர்கள் முடிப்புரையில் திரு. இலக்குவனார் அவர்கள் தன் மாணவரென்றும் உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போதே அவர்தம் கூர்ந்தமதியைத் தான்கண்டு பாராட்டியதாகவும் அவர்தம் தொல்காப்பிய ஆராய்ச்சிமிகச் சீரியமுறையில் அமைந்திருக்கும என்பதில் ஐயமில்லை என்றும் கூறிப் பல்லாண்டு எல்லா நலங்களும் பெற்று வாழுமாறு வாழ்த்தினார்கள்.

இறுதியில் சங்கத் தலைவர் நன்றியுரைகூறச் சங்க வாழ்த்துடன் முதல் நாள் விழா இனிது நிறைவேறியது.

இரண்டாவது நாள் 11—10—64 ஞாயிறு மாலை 5½ மணியளவில் தமிழ்த்தாய் வணக்கத்திற்குப்பின் சங்கத் தலைவர் அவர்கள் அனைவரையும் வரவேற்று இவ் யாண்டு கலைமகள் விழா இருபெரும் பேராசிரியர்களைப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் சங்கம் அமைத்துக்கொண்டமையை விரித்துக்கூறி இன்றைய பாராட்டுக்குரிய பேராசிரியர் உரை வேந்தர் சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்களையே விழாவிற்குத் தலைமை ஏற்று நடத்திக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். விழாத் தலைவர் சொற்பொழிவாளரைப் பேசுமாறு அழைத்தார்கள். சரபோசி அரசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. சீ. சுந்தரேசன் எம்.ஏ. அவர்கள் "இலக்கியம் அன்றும் இன்றும்" என்ற தலைப்பில் பண்டைய இலக்கியத்தோடு தற்

கால இலக்கியங்களை ஒப்பிட்டும் சிறுகதை புதினம், நாடகம்—கவிதைகள்—வளர்ந்துள்ள நிலைபற்றியும் அழகாக விரித்துப்பேசினார்கள். பின்னர் பாராட்டுக்குரிய விழாத் தலைவர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்களின் சிறப்பைச் சங்கத் தலைவர் திரு. ச. சுயம் பிரகாசம் அவர்கள் முன் மொழிய சங்க அமைச்சரும் சங்கக் கல்வி நிலையங்களின் தாளாளருமான திரு. நா. சொக்கநாதன் செட்டியார் அவர்கள் பொற்பட்டாடை போர்த்திவாழ்த்தினார்கள். பின்னர் சங்கச் சார்பில் ச. பாலசுந்தரம் மணிவிழாப் பாராட்டியல் வாழ்த்துரையைப் படித்தளித்து அவர்தம தமிழ்ப் பணியின் சிறப்பினைச் சிறிதேபுகன்று பாராட்டினார்கள்; பின்னர் கரந்தை சிவ. குப்புசாமிப்பிள்ளையவர்கள் சித்தாந்த கலாநிதி யவர்களின் இளமை முதல் அவர்களின் கல்வி வரலாற்றையும் பிறசிறப்பியல்புகளையும் சங்கத்தோடுள்ள தொடர்புகளையும் புலப்படப் பேசினார்கள்; பின்னர் ந. மு. கோவிந்தராய நாட்டார் பி.ஏ., எல்.டி., திரு. அடிகளாசிரியர் தஞ்சை P. S. வேங்கடகிருட்டினப்பிள்ளை, புலவர் சி. கோவிந்தராசனார், புலவர் R. ஏகாம்பரநாதனார், புலவர் தி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் அவர்தம் சிறப்பியல்புகளையும் சீரிய நூல்களுக்குத் தேறிய உரை வகுத்தருளிய மாண்பினையும் தந்தை தான் தன்மகன்என மூன்று தலைமுறையாகத் தமிழ்ப் பணிபுரியும் பெருமையினையும் சித்தாந்தப் புலமையினையும் ஆராய்ச்சியறிவையும் பாராட்டிப் பட்டம் பெறாத பண்டாரகர் எனச் சிறப்பித்துப்போற்றி மகிழ்ந்து வாழ்த்தினார்கள்.

பாராட்டுக்கு நன்றிகூறும் முகத்தான் ஔவை சங்கத்திற்கும் சங்கத் தலைவராய் அமர்ந்து பெரும்பணிபுரிந்த தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் அவர்கட்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். தமிழவேள் அவர்கள் தன்மாட்டுச் செலுத்திய தனியன்பையும் அதன்காரணமாக வீரத்திரு. A T. பன்னீர்ச்செல்வம் அவர்கள் தன்னிடத்துக்காட்டிய பரிவையும் எடுத்து மனங்குழைந்தார்கள். சித்தாந்தம் ஒவ்வொருவரும் அறியவேண்டிய உண்மைக் கலை எனவும் அதனைத் தெளிவாக அறிந்துகொள்ள கணிதநூற் புலமையும்—அறிவியற் புலமையும்மிக்க துணையாகும் என்றும்கூறிச் சங்கம் மேன்மேல் உயர்ந்து தமிழ்ப்பணிபுரிய அன்பர்கள் பொன்னும் பொருளும் வாரிவழங்கி அருள வேண்டுமென்றும் வெள்ளி விழாவைப்போல அதனினும் சிறப்பாகப் பொன்விழாவைக்கொண்டாட வேண்டுமென்றும் அதற்குத் தற்பொழுதுள்ள சங்கத் தலைவர் அமைச்சர் ஏனைய செயற்குழுவினர் தகுதியுடையவர்கள் என்றும் அவர்கள் முயன்று சிறப்பாக நிகழ்த்தித் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் ஆக்கம் புரிய வேண்டுமென்றும்கூறித் தன்னுடைய ஆழ்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இறுதியாகச் சங்கத் தலைவர் எல்லோருக்கும் நன்றிகூறச் சங்க வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

வாழி பகலோன் வளரொளிசேர் ஞாலமெலாம்
ஆழி செலுத்துதமிழ் அன்னையே—வாழியரோ
நங்கள் கரந்தைத் தமிழ்ச்சங்கம் நாளும்
அங்கந் தழைக்க அமைந்து. (பொழிற்றொண்டர்.)

தமிழ் வாழ்க.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

மதுரைத் தியாகராயர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர்
பேராசிரியர் உயர்திரு,

டாக்டர் சி. இலக்குவனார் எம்.ஏ., (எம்.ஓ.எல்.) பிஎச்.டி., அவர்கள்
சென்னைப் பல்கலைக்கழகத்தில் பண்டாரகர் (Doctor) பட்டம்
பெற்றமை குறித்து
10—10—64இல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் உவந்தளித்த

பாராட்டியல் வாழ்த்துரை.

1. புவிமுதற் பிறந்து சங்கப் புலவர்செந் நாவில் வாழ்ந்து
கவிஞர்கள் போற்ற முற்றிக் கலைகளாய் விளைந்து, மாந்தர்
செவிபுகுந் தறிவும் மாண்பும் செய்தமிழ் ஆம்நம் தாயின்
குவிபுகழ்ப் பெருமை கூர்த்த வளன்திருச் செம்மை
[எல்லாம்

2. தென்னகம் அறிந்து பண்டைச் சீர்பெற வளர்த்து வாழ
உன்னிய தமிழ வேளோ டுயர்தமிழ் அன்பர் கண்ட
கன்னியின் கோயி லாய கரந்தைவாழ் தமிழ்ச்சங் கத்தின்
மன்னிய பணியைப் போற்றி மகிழ்துணை யாகி நின்று

3. தண்டமிழ்த் தொண்டு செய்யும் தனிப்பெரும் புலவ!
[முன்னோர்
கண்டநன் னூலுள் தோய்ந்து கருத்தறிந் துரைக்குஞ்
[சான்றோய்!
வண்டமிழ் ஆரி யத்தின் வாழ்வினுக் கன்றி மாண்ட
பண்டைய மொழிக்கும் ஈந்த பண்பினை விளக்கும்
[நல்லோய்!

4. வான்முகில் எனச்சொன் மாரி வளர்தமிழ்ப் பயிரிங் கோங்கி
மேன்மையுற் றொளிரப் பெய்து விருந்தென மாண வர்க்குத்
தேன்கமழ் அறிவை யூட்டிச் செம்பொனேர் எழுத்தால்
[புன்னூல்
புரன்மையின் வரைந்தெண் டிக்கும் பைந்தமிழ்
வளர்ப்போய்! வாழி!

5. தொட்டனைத் தூறிப் பொங்கும் தூமணற் கேணி யன்ன
மட்டிலாப் பொருளைத் தன்னுள் மடுத்துசெந் தமிழ்மொ
[ழிக்கே
பெட்டக மாகிப் பன்னூற் பெற்றெடுத் திளமை குன்றாக்
கட்டழ கோடு வாழ்தொல் காப்பியக் கடலுட் புக்கே.

6. பாசியை மட்டுங் கண்டோர் பலர், சிலர் பவழங் கண்டார்
மாசிலாச் சங்கும் முத்தும் மாண்பொடு கண்டார் சில்லோர்,
வீசுறும் அலையிற் சிக்கி மெலிந்தவர் தாமும் உண்டே?
ஆசிலா அமிழ்தை நின்போல் அளித்தவர் அருமை ஐயா!

7. மூப்புடை மொழிகட் கெல்லாம் முதன்மையாய் மும்மை [யாகி
மாப்புகழ் விரித்து நிற்கும் வான்றமிழ் இயல்நூல் தந்த
காப்பியன் கருத்தும் இன்பக் கனிதமிழ்ச் சிறப்புந் [தொன்னூல்
யாப்பமை செறிவும் மாண்பும் ஞாலத்தார் உணரும் [வண்ணம்

8. பாங்கொடு பயின்று நுண்மைப் பருப்பொருள் விரித்துக் [காட்டி
ஓங்குதொல் காப்பி யத்தின் உண்மையைத் திண்மை கூர
ஆங்கில மொழிவல் லாரும் அறிந்துணர்ந் தறிவு மேவ
ஈங்களித் தொளிரும் சான்றோய் இலக்குவப்
பெரியோய்! வாழி!

9. சில்லுரைத் தெளிவைச் சற்றே தெரிந்துளம் மகிழ்ந்த [சென்னைப்
பல்கலைக் கழகந் தானும் பரிந்துபண் டார கச்சீர்
சொல்வளர் **டாக்டர் பட்டம் துலங்கநிற் களித்துப்** [போற்றி
வெல்புகழ் கொண்டு துன்றன் வீறினுக் கிதுசா லாதே!

10. ஒருமொழி யாகி ஓங்கிவ் வுலகினுக் கொளியைத் தந்த
பெருமொழி தமிழே என்று பிறமொழி யாரும் போற்ற
இருமொழிப் புலமை முற்றி இருந்தமிழ் வளர்த்துத் [தேரூர்
வருமொழி கட்கா ளாகும் வசையினைத் தவிர்ப்போய்! [வாழி!

11. ஆய்வுரை அறிஞ! சங்கத் தன்புடை அண்ணல்! வாழி!
தோய்தமிழ் நண்ப! இன்பந் துலங்கநல் வளத்தோ டூழி
தாய்மொழிப் பணிசெய் தோங்கித் தமிழெனத் தழைத்து [வாழி!
சேய்தமிழ்த் தொண்டர் வாழி! செந்தமிழ்ச் சங்கம் வாழி!

இங்ஙனம்,

கரந்தை—தஞ்சை,
10—10—1964.

ச. சுயம்பிரகாசம், பி.ஏ., பி.எல்.
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தமிழ் வாழ்க.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

மதுரைத் தியாகராயர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், உரைவேந்தர்

திருவாளர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்

அறுபதாண்டு நிறைவு மணிவிழா எய்தியமைக்கு மகிழ்ந்து

11—10—64இல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் கூறும்

பாராட்டியல் வாழ்த்துரை.

1. ஒலிகடல் சூழ்ந்த ஞாலத் தொருமொழி யாகி எல்லாக்
கலைகளும் மிளிர வாழ்ந்த கன்னிநற் றமிழின் சீர்த்தி
வலமுறத் தெரிந்து பண்டை வாழ்வையிந் நாடு கொள்ள
மலிபுகழ் தமிழவேள், சீர் வளர்தமிழ் அன்ப ரோடும்

2. தகவினால் முயன்று கண்ட கரந்தைவாழ் தமிழ்ச்சங் கத்தே
நிகழ்பணிக் குதவி யாகி நிறைதமிழ்த் தொண்டு செய்து
புகழ்மிக விளங்கும் அண்ணால் ! பொலிவுறு மகவை ஏந்தி
அகமகிழ் தாய்போ லுன்னை அன்பினால் வாழ்த்து கின்றோம்

3. நெறியினால் வளர்ந்து தூய நெஞ்சினால் தமிழ்த்தொண் [டாற்றும்
செறிவினாய் ! வருக ! எங்கள் செந்தமிழ் மணியே ! வாழ்க!
முறையினால் அறுபா னாண்டு முற்றினை தமிழ்ச்சீர் பேணும்
அறிவினால் மேலும் பன்னா ளாண்டினி துயர்ந்து வாழி !

4. தேன்வளர் அருவி போலச் செந்தமிழ்ச் சுவையைத் [தேர்ந்து
பான்மைகொள் மாணாக் கர்க்குப் பரிவினால் அளிக்கும் [ஆசான் !
வானமழை போலும் மக்கள் மனத்தினில் தமிழ்மா ண [போங்கத்
தான்சொரிந் தமிழ்த மாகத் தமிழுரை வார்க்குந் தக்கோய் !

5. ஆங்கிலப் பட்டம் வேண்டா தழகுறு பதவி வேண்டா (து)
ஆங்கில மொழியுந் தேறி ஆர்ந்தமேற் பதவி யோரும்
தாங்கிநின் றேத்தும் வண்ணம் தகவமை புலமை முற்றி
ஓங்குசெந் தமிழ்த் தொண்டாற்றி ஒளிமிகும் செம்மால் [வாழி!

6. இறை,உயிர் தொடர் பிவற்றின் இயல், நெறி ஆக்கங் [கண்டு
முறைபெறத் தெரிக்கும் தூய மொய்ம்புசால் தெய்வ [நூல்கள்
மறைபெற உணர்த்தும் உண்மை மாண்பெலாம் [நுணுகித் தேர்ந்து
நிறைவுறக் கற்ற மேலோய்! நெடும்புகழ்க் குரிசில் வாழி!

7. கனிதமிழ் சேர்சித் தாந்த கலாநிதி என்றென் றேத்தப்
பனிமதி சூடும் பெம்மான் பதமலர் மறவா தேத்தி
நனிமிகு சைவத் தொண்டே நாளுமிங் கியற்றி யார்க்கும்
இனியனாய் எளிய னாகி இலங்குபே ரறிஞ! வாழி!

8. நற்றிணை புறநா னூறு நலமிகு பதிற்றுப் பத்து
முற்றுமைங் குறுநூ றின்ன முதுதமிழ்ப் பொருளை ஈண்டுத்
தெற்றென வரைந்து காட்டிச் சேரர்தம் வரலாற் றைச்சீர்
பெற்றிடத் தந்த பெம்மான்! பிறங்கிப்பல் லூழி வாழி!

9. களவியல் உரைகாண் கீரர், கலித்தொகை முதலாத் [தொன்னூல்
உளவியல் உரைத்த நச்சர் உயர்அடி யார்க்கு நல்லார்
அளவறி அழகர் பேரா சிரியர்தம் வரிசை மேவ
வளமிகு பெருநூற் கெல்லாம் மாண்புரை செய்து வாழி!

10. ஆய்ந்துரை புரியும் அண்ணல்! அன்பருள் அடக்கம் [சால்பு
தோய்ந்தொளிர் தூய **ஔவை-துரைசாமி** எனுஞ்சீர்த் [தோன்றல்!
வாய்ந்தநின் மணி விழாவை மகிழ்ந்துகண் டுவக்கும் [யாமுன்
ஏய்ந்தநின் நூற்றாண் டிற்கும் எழில்விழாக் காண்போம் [வாழி!

11. செல்வமும் புகழும் வாழ்வும் சிவனரு ளாலே ஓங்கி
நல்வலம் பொலிய ஊழி நறும்பணி புரிந்து வாழி!
ஒல்வழித் தமிழ்த்தொண் டாற்றும் உயர்தமிழ் அறிஞர் [வாழி!
சொல்வளர் சங்கம் வாழி! தொண்டர்கள் வாழி! வாழி!

இங்ஙனம்,

கரந்தை-தஞ்சை, 11—10—1964

ச. சுயம்பிரகாசம், பி.ஏ., பி.எல்.,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மனையறத்தில் கண்ணகி

(புலவர் ந. செகநீசன்)

முப்பாலில் மூன்றும்பால் ஆய்வ தற்கு
முழுவசதி உடையபள்ளி அறையுள் சேர்த்தே
அப்பாலே செல்லுங்கள் யாரு மங்கே
அணுகாதீர் என்றுதடை போட்டி ருந்தார்
இப்பாலே இருந்தசில பெரியோர்! அந்த
இனியபள்ளி அறையினிலே குறட்டை போட
அப்பாவி மாணவனு கோவ லன்தான்!
அழகான காவியத்தைச் சுவைக்க லானுன்! (கரு)

செங்கழுநீர்ப் பூப்படிந்து தாம ரைப்பூச்
சேர்ந்துலவி மணமுண்டு தாழம் பூவின்
பொங்குமண மடல்படுத்துப் புரண்டெ ழுந்து
போதலரும் மாதவிபால் சென்ற டைந்து
தங்கியவண் தாதாய்ந்து பசித ணிந்தும்
தங்கநிலா முகம்பெண்டிர் குழல் மணத்தில்
பங்குபெறப் பித்துற்றுச் சுழன்று வந்து
பாடுகின்ற சுரும்புகளோ பாணர் கூட்டம்! (கசு)

அப்பாணர் தம்மோடும் வண்டுக் கூட்டம்
அதனோடும் அங்கங்கே மலர்ந்தி ருக்கும்
செப்பரிய பன்னிறத்துப் பூம்ப டுக்கை
சேர்ந்தினிய மணமேந்தி நடன மாடிக்
கைப்பிடித்துப் பெரியருடன் மன்றி னுள்ளே
கால்வைக்கும் சிறியரைப்போல் தென்றற் காற்று
தப்பாமல் உட்புகுவோர் செவ்வி பார்த்துத்
தாவிவந்து சாளரத்தில் நுழைந்த தங்கே! (கஎ)

வெண்ணிலவு விண்மார்பைத் தழுவி யின்ப
விருந்துபெறல் கோவலன்மேல் நோக்கிக் கண்டான்!
நுண்டுளைகொள் சாளரத்தின் வழியே பார்த்தான்
நுடங்குமெழிற் கொடியனைத்த மரங்கள் கண்டான்!
கண்மலர்கள் மணத்துமணம் அள்ளி வந்து
களிதென்றல் கூத்தடித்தல் கண்டான்! அங்கே
எண்ணத்தில் மிதக்கின்ற இன்ப ஓடம்
எழிலரசி கண்ணகியை எதிரே கண்டான்! (கஅ)

வண்டுவிழி இமைமலருள் பதுங்க, மெல்ல
வடித்தெடுத்த புதுச்சிற்பம் குனிந்து நாணம்
கொண்டதனைக் கண்டான்தன் விழியால் மேய்ந்தான்!
குலையாத ஓவியப்பெண் மென்மு கத்துச்

செண்டுமலர்ப் பரப்பெல்லாம் மிகச்சி வக்கத்
தேனிதழில் புன்முறுவல் இனித ரும்பக்
கொண்டவனை எதிர்நோக்க விருப்பி ருந்தும்
குறுகுறுப்பால் வெட்கத்தால் மிகத்த வித்தாள்; (கசு)

கொஞ்சிவந்து கொண்டாட்டம் போடு கின்ற
குளிர்தென்றல் கோவலனை விடுமா சும்மா?
எஞ்சாத மயக்கத்தைக் கிறுகி றுப்பை
ஏற்றிடவே அவன்பதைத்தான்! துடிக்க லுற்றான்!
வஞ்சியரோ மனத்தாவல் மிகுந்த போதும்
வாய்திறந்து சொல்வதில்லை! இன்பத் திற்குக்
கெஞ்சுகின்ற மனமிருந்தும் அதையடக்கிக்
கேள்வனைத்தான் திண்டாட வைப்பார் பாரில் (உ௦)

கண்ணகியும் அப்படித்தான்! எதிரி ருக்கும்
கட்டழகன் மலர்மார்பைக் குனிந்திருந்தே
கண்களினால் சுவைத்திருந்தாள்! பசித்திருந்த
காதலுளம் அவனினிய சொற்களுக்கே
அண்ணாந்து வாய்திறக்கக் கண்டாள்! சீர்த்த
ஆணழகன் மலைத்தோள்மேல் தாவு தற்குப்
பெண்மயிலாள் விருப்புற்றாள்! இருந்த போதும்
பேசாத சிலையானாள்! அதுதான் பெண்மை! (உக)

வடமொழிபோல் பேச்சிழந்த பெண்ணைக் கண்ணால்
வாரியுண்ணும் கோவலனா பொறுப்பான்! அந்த
மடவனத்தின் கரந்தொட்டான்! முகமு யர்த்தி
மானேவா! என இடையை வளைத்தான் கையால்!
உடனெழுந்தாள்! ஒசிந்தவன்தோள் கிளைமேற் சாய்ந்தாள்!
ஒய்யார அடிபெயர்த்துத் தலைவ னோடு
நடமிட்ட படிநடந்தாள்! இரண்டு பேரும்
நயந்துநிலாப் பயன்துய்க்கும் முற்றம் சேர்ந்தார்! (உஉ)

வட்டநிலா செங்கதிரோ டிருக்கும் காட்சி
வானத்தில் நிகழ்ந்ததில்லை! அந்த விந்தை
மொட்டலர்ந்து மணம்பரப்பும் படுக்கை யின்மேல்
முற்றத்துக் கட்டிலிலே நிகழ்ந்த தன்று!
பெட்புறுநற் கண்ணகிதான் நிலவாம்! காதற்
பெரும்புலவன் கோவலனே கதிராம்! அங்கே
தட்டாத ஓசையுறும் பாட்டைப் போலத்
தலையாய காதலின்பம் பொங்கக் கண்டார்! (உங)

[வேறு]

அருகினில் இருந்த அழகின் வடிவாம்
ஒருமகன் தன்னை உற்றுப் பார்த்தான்!
பார்வை வீச்சில் பாவை நலிந்தாள்!
ஆர்வமோ டவளை அணைக்க விழுந்தான்!

விலகா நெஞ்சினள் விலக முயன்றனள்!
"குலவு மின்பக் குடியிருப் பாகிய
எண்ணங் கவர்ந்த கண்ணகி நீகேள்!
வண்ண நிலவின் வரவைக் கண்டதும்
நாணப் போர்வையுள் நலியுமா அல்லி!
பூண்மணத் தென்றல் புக்க பின்னரும்
பூங்கொடி நாணம் தாங்குமோ கூறு!
தாங்கருங் காதல் தழைத்த நெஞ்சுடன்
தேரினில் வந்தே நேரிய அலையால்
ஈர முத்தம் இருநூறு தடவை
கடல்தா னளிக்கக் கரையா நாணும்?
மடலிடைத் தழுவும் மணிச்சுரும் பெய்தின்
தாழம் பூத்தான் நாணந் தரிக்குமா?
சூழ்ந்து புதுப்புனல் தொடவரும் போது
நெற்பயிர் நாணி நிற்பது முண்டோ?
புற்பரப் பதன்மேல் பொன்பனித் துளிகள்
தாவி யணைக்கும் சமயம்! நாணம்
மேவிக் கிடக்குமா மென்புற் பரப்பே!
என்னரு கிருக்கும்! இதயப் பாடலே!
இன்னுமா நாணம் பூணவும் வேண்டும்?
என்று கோவலன் எடுத்தெடுத் துரைத்தான்!
நன்னர் அந்த நங்கையின் தோளைத்
தொட்டான்! இன்ப உலகைத் தொட்டான்!
தொட்டவன் தோளிலே தோகை சாய்ந்தாள்!
அங்கம் யாவுந் தங்கமாய்க் கொண்ட
மங்கையின் வளவேய்த் தோள்மிசை மெல்லச்
சிந்தை மகிழச் சந்தனக் குழம்பில்
விந்தையாய்க் கரும்பும் வல்லியும் விளங்கத்
தீட்டினன் தனது ஓவியத் திறத்தைக்
காட்டினன்! அவளைக் களிப்பில் ஆட்டினன்!
பருவச் சிட்டுகள் நெருங்கினர் மேலும்!
ஒருவரை யொருவர் பருகினர் விழியால்!
நிலவும் கதிரும் நேருற ஒன்றின!
மலரிதழ் மலரிதழ் மருவித் திளைத்தன!
தாரும் மாலையும் தழுவி உவந்தன!
தார்க்கட் டறுந்து நறும்பூ உதிர்ந்தன!
திருமணங் கொண்ட செல்வனும் செல்வியும்
ஒருயிர் ஒருடல் ஆயினர் இன்ப
ஆர்கலி யதனுள் அமிழ்ந்தனர் ஒன்றாய்!
தனியாக் காதல் தரித்த கோவலன்
அணியிழை முகத்தை அன்புடன் நோக்கிக்
குறியாக் கட்டுரை கூறுவா னயினன்!
குறுநெறிக் கூந்தல் கொடுத்தனள் செவியே! (உ௪)

குறியாக் கட்டுரை :— (அறுசீர்விருத்தம்)

கொழுந்தான பிறைநிலவை வானவர்கள்
குறித்தேத்த முக்கட் பெம்மான்!
விழுப்பமுறத் தம்முடைய விரிசடையில்
விருப்புறவே அணிந்த செய்கை
தொழத்தக்க அருமைத்தே ஆயிடினும்
தோகையுன்றன் உடன்பிறந்த
பழுதற்ற உரிமையினால் திருநுதலாய்ப்
பரிந்தவனே தருவா னாக! (உரு)

செம்பவள இதழுடையாய்! செருக்களத்தில்
சீறியெதிர் பகைவர் தம்மை
வெம்மையுற அழிக்கின்ற வீரத்தில்
சிறப்புற்று விளங்கு கின்றோர்
தம்மைமிகப் புகழ்ந்தரசன் படைக்கலங்கள்
தருகின்றான்! காமன் என்பான்
எம்முடனே புரிபோரில் நீயவற்கே
ஈகின்றாய் பெரிய வெற்றி! (உ.சு)

என்பதனால் அவன்தனது திறமையினை
ஈடற்ற போர்ச்சி றப்பை,
அன்புற்ற மனம்வியந்து களிப்பானாய்
ஆடவரைத் தொலைத்துக் கட்ட
வன்மையுடன் எடுத்திருக்கும் வண்கரும்பு
வரிவில்லை எடுத்து னக்கு
தன்மைபெற இருகரிய புருவமென
நயந்தளிப்பான் ஆவா னாக! (உ.எ)

ஆருயிரே! அடையவரும் மரணத்தை
அழித்தழியா வாழ்வ ளிக்கும்
பேரமுதம் பிறந்ததுவும் உனக்குப்பின்
பெரியைநீ எனப தாலே
தேராலுற்றே இந்திரனார் வச்சிரமாம்
திகழ்படையைத் திருத்தம் செய்து
சீரெதிரும் சிற்றிடையாய்த் தருவதனால்
சிறப்புறுவான்! தருவா னாக! (உ.அ)

பிறர்துயரில் நெட்டுயிர்த்துக் கலங்கிமனம்
பெரிதிளைத்து வாடு கின்ற
திறங்காணல் சிலருக்கோ பெருவியப்பு!
செவ்வேளும் அப்ப டித்தான்!
உறவுமுறை உரிமைநிலை ஒன்றுமற்ற
உண்மையினைத் தெரிந்தும் வேலைப்
பிறங்குமிரு விழியாக உனக்களித்தான்
பெரிதுமெனை வருத்திப் பார்க்க! (உகூ)

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி

களவியல் உரைநலம்

(இரண்டாம் நூற்பா உரை)

(திருவாட்டி மேனகை அம்மையார் இராணிப்பேட்டை)

மலர்கள் நுங்கடிபொழிலகத்துளவோ என்றவாறு "முள்தாள் தாமரைத் துஞ்சிவைகறைக்கட்கமழ் மலருது" என்னும் செய்யால் 'போது' உளவோ என்றார். இதில் குறிப்பிட்ட போரையும் கோச்சடையன் ரணதீரனே செய்தானாகல் வேண்டும்; இவனுக்கு இத்தனோ வானவன் என்ற பட்ட முண்டானமையுங்கருதுக.

"விண்டே யெதிர்ந்த தெவ்வேந்தர் படவிழி ஞத்துவென்ற
ஒண்டேர் உசிதனெங் கோன்கொல்லிச் சார லொளிமலர்த்தா
துண்டே யுழல்வா யறிதியன் றேயுள வேலுரையாய்
வண்டே மடந்தை குழல்போற் கமழு மதுமலரே"

தன்னுழையிலிருந்து பிரிந்து சென்று எதிர்த்த பகைவேந்தர் படவிழிஞத்து வெற்றியெய்திய ஒளிசேர்தேரினையுடைய உசிதனுய வேந்தனது கொல்லிமலைச் சாரலில் வண்ண ஒளிசெய்யும் மலர்த்தா துண்டுழல்வாய்; எனவே அறிதியன்றே, எனவே உரைப்பாய் வண்டே, மடப்பம் பொருந்திய இவளது குழல் போல் மணம் செய்யும் மதுநிறைந்த மலர் யாண்டேனும் உளவோ என்றவாறு மலருழை மதுபோன்று இவளுழை இன்பமிருத்தலையானறிவேன், ஆயின் இவள் குழல் நாறுந்தகைமைபோல் நாறும் பூ உளவேல் நீ கூறு என்றானாயிற்று.

"பொருங்கழல் வானவற் காயன்று பூலந்தைப் போர்மலைந்தார்
ஒருங்கழ லேறவென் றான்கொல்லிச் சாரலொண் போதுகடம்
மருங்குழல் வாய்நீ யறிதி வண் டேசொல் லெனக்குமங்கை
கருங்குழல் போலுள வோவிரை நாறுங் கடிமலரே"

போர் செய்யுங் கழலணிந்த வானவனின் (சேரனின்) பாலராகித்தன்னோடு மாறுபட்டுப் பூலந்தைப்போர்விளைத்தாரெல்லாரும் ஒருங்கே அழலில் ஏறும்படிக்கொன்ற வெற்றியினான், தனது கொல்லிச் சாரற்கண் ஒள்ளிய போதுகளது மருங்குழல்வாய் வண்டே நீ அறிதி, எனவே எனக்குச் சொல்வாயாக. மணம்வீசுவன மலரென்பது நானறிவேன், ஆயின் இத்தலைவிதன் கூந்தல் போற் கமழுவனதாமோ அவை? அதனைத் தேர்ந்துரைத்தி என்றானும்.

"தேற்றமில் லாததெவ் வேந்தரைச் சேவூர் செருவழித்துக்
கூற்ற மவர்க்கா யவன்கொல்லிச் சாரல்கொங் குண்டுழல்வாய்
மாற்ற முரைநீ யெனக்குவண் டேமங்கை வார்குழல்போல்
நாற்ற முடைய உளவோ அறியு நறுமலரே"

உறுதி பயப்பதும் பயவாததும் தெளியாத பகையரசரைச் சேஞூர்ச்செருவில் அழித்து அவர்க்குக் கூற்றாகிய பாண்டியன் தனது கொல்லிச்சாரல்வாய் கொங்குண்டு உழலுதி; வண்டே நீ அறியும் நறுமலர்களில் ஒன்றனிடத்தாவது இவளதுவார்குழல் போல நாறுந்தகைமையுண்டோ கூறுதியென்று ஆயிற்று.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே"

என்ற இறையனார் பாடலையுந்தந்துள்ளார். எப்பாடல் குற்றமுடைத் தென்று வழக்கிட்டாரோ அப்பாடலைத் தந்ததோடமையாது அதே கருத்தினையே அகங்கொண்ட ஆறுவேறுபாக்கள் நக்கீரர் ஆக்கித் தந்தது வியப்பினும் வியப்பாம்.

ஙெ பிரிவச்சம் தொடங்குமுன்

இப்பிரிவச்சத்துமுன் காதலரிருவரிடையே நிகழும் தன்மையை விளக்குமாறு

"அவ்வகை (நயப்பு) தன்னைப்புகழத்தலைமகள் ஆற்றாளாயினாளாம். என்னை, சிறியவரும் தம்முன்னின்று தம்மைப்புகழ்ந்தவிடத்து நாணி வருந்துபவாகலான் தான் பெருமையும் பெருநாணும் உடையாள் தலைமகன் முன்னின்றுபுகழ ஆற்றாளாவது சொல்ல வேண்டுமோ? அவ்வகை ஆற்றாளாயினாளது ஆற்றாமை தலைமகற்குப் புலனாயிற்று புலனாக அதனைக்கண்டுநீருடை நிலத்து நிவந்த நீள்மரம் வெப்பத்தால் தெறப்படாததுபோல யான் உழையேனாக இவ்வேறுபாடு இவட்காகாதன்றே! இஃது எற்றினானாயிற்றுக் கொல்லோ என நினைந்தான். நினைந்து, அறிந்தேன் என்னது காதல்மிகவினாற் பாராட்டப்போலும் என உணர்ந்தான் உணர்ந்து யான் தன் முன்னின்று தன்னைப்பாராட்டவும் இவ்வகை மெலிவு சென்ற பெருநாணுடையாள் புறத்து யாரானும் ஒருவர் இவ்வொழுக்கத்தை உணர்வார் கொல்லோ என்று உட்கொண்ட ஞான்றுஇவள் இறந்துபடும் போலும் எனப்பெரியதோர் ஆற்றாத்தன்மையனாயினான். ஆற்றாத்தன்மையன் என்பது எவ்வுணர்வுமின்றி அவ்வாற்றாமை தானே ஆவது. அவ்வகை ஆற்றானாய தலைமகனது ஆற்றாமைக்குக் கவன்றுமுன் நாணிற்சென்றெய்திய ஆற்றாமை நீங்கித் தலைமகள் ஆற்றாளாயினாள் வேலேறுபடத்தேளேறு மாய்ந்தாற்போல அது தலைமகற்குப் புலனாயிற்று. புலனாக இவள் எவ்விடத்தும் தன்தன்மை என்பதொன்றிலாள். என் தன்மையளே யான் ஆற்ற ஆற்றி, யான் ஆற்றாதவிடத்துத் தானும் ஆற்றாளாமாகலான்; யான் பிரிந்தவிடத்து என் குறிப்பன்றி இறந்துபடாள். அல்லதூஉம், யான் பிரியாது விடப் புறத்தாருணர்வர். புறத்தாருணரவே, இவள் ஆற்றாளாம். ஆகலான் யான் பிரியவே, புறத்தார் உணரார். ஆகவே இவள்

ஆற்றும் எனக் கருதி, இவன் கருங்குழல் கற்றைமருங்கு திருத்தி, அளகமும் நுதலும் தகைபெற நீவி ஆகமும் தோளும் அணி பெறத் தைவந்து, குளிர்ப்பக் கூறித் தளிர்ப்பமுயங்கிப் பிரிவலென்று ஸவித்தான். வலித்துப் பிரிவச்சம் என்பது ஒன்று சொல்லுதும்." என அழகுறவிளக்குந்திறம் உணர்ந்து இன்புறற்குரியது.

மச. பிரிவச்சம்.

"பிரிவச்சம் என்பதுதான் பிரிவு அஞ்சிற்றும் பிரிவச்சம், அவளைப் பிரிவு அஞ்சுவித்ததும் பிரிவச்சம்; ஆகலின் பிரிவச்சம் எனப் பட்டது. அஃது யாங்ஙனம் சொல்லுமோ எனின் 'நின்னிற் பிரியேன் பிரியின் ஆற்றேன் என்னும். அதற்குச் செய்யுள்."

"மின்னிற் பொலிந்தசெவ் வேல்வலத் தான்விழி ஞத்தெதிர்ந்த
மன்னிற்கு வானங் கொடுத்தசெங் கோன்மன்னன்
வஞ்சியன்னாய்
நின்னிற் பிரியேன் பிரியினும் ஆற்றேன் நெடும் பணைத்தோள்
பொன்னிற் பசந்தொளி வாடிட என்னீ புலம்புவதே."

மின்னைப் பொலிவு செய்யும் சிவந்த வேலானேய்திய வலத்தையுடையவனும் விழிஞத்துப்போரிலே தன்னை எதிர்ந்து நின்ற மன்னவற்கு விண்ணைகங்கொடுத்த செங்கோல் மன்னனும் ஆயவழுதிக்கு உரிமையாய வஞ்சியென்னும் ஊரினைப் போன்ற வஞ்சியாய்! யான் நின்னிற்பிரியகில்லேன், பிரியினும் ஆற்றகில் லேன். என் தன்மை இவ்வாறாக நின்மணிநிறம் கிளரும் நீண்ட பனை போன்றதோள்கள் பொன்போன்ற பசலைநிறம் படர்ந்து தன் ஒளி மழுங்கும்படி நீ புலம்புவது யாது காரணம் பற்றியோ கூறு வாயாக என்றானும்.

இவன் செங்கோன் மன்னன் என்றதனால் இவனை எதிர்ந் தோர் அன்னரல்லராதலையுணர்க. என்னை "கொடாமை வல்ல ராகுப, கெடாத துப்பினின் பகையெதிர்ந்தோரே" என்ற ஆன் றோர் வாக்கை ஓர்க. தன்னை எதிர்ந்த வேந்தற்கு இன்பக் குறை யுளாம் வானகம் கொடுத்த அரசனது நாட்டுறைபவனாகலின் இவ னும் தன்னை எதிர்ப்பட்ட தலைவற்கு இன்பக்குறையுளாம் புணர்ச்சி தந்தமை பெறப்பட்டது.

நின்னிற்பிரியேன் பிரியினாற்றேன் என்று கூறியவாறு என்னை யெனிற் பின்னைப் பிரியவேண்டுவதாகலின் பிரியேனென்று கூறிப் பின்னர்ப் பிரிவானாயின் தலைமகன் பொய் கூறினானும் எனத் தலைவி இறந்துபடும், அதனால் பிரியேனென முற்கூறிப் பிரியினாற்றே னெனப் பிற்கூறிப் பிரிவையும் அறிவுறுத்தினானும்.

"அணிநிற நீள்முடி வேந்தரை யாற்றுக் குடியழியத்
துணிநிற வேல்வலங் காட்டிய மீனவன் தொண்டியன்ன
பிணிநிற வார்குழற் பெய்வளைத் தோளிநின் னிற்பிரியேன்
மணிநிறம் பொன்னிற மாயிடஎன்னீ வருந்துவதே"

அழகிய ஒளிகளை வீசும் நீண்ட முடிபெறு வேந்தர்களை ஆற்றுக் குடியில் அழிவுபடுமாறு துணிந்த சிவந்த நிறமுடைய வேலினது வெற்றித் தன்மையை அறிவுறுத்திய மீனக்கொடி மன்னவனது தொண்டியினது அறம்போன்று கரியநிறமமைந்த நீண்டகுழலை யுடையாய் வளைபூண்ட தோளினாய், யான் நின்னிற்பிரியேன். அங்ஙனமாக அழகிய நினது நிறம் பொன்போன்ற பசலைபூப்பப் பருவரலுற்றாய் இஃதென்னை சொல்லென்றாளும்.

நீண்முடிவேந்தர் நிணத்தால் சிவந்த வேலைப்போன்று நின்று பரவரல் மிகவால் நின்மேனியும் வேறுபட்டதென்றாளும் ஏனையவற்றையும் முன்போலத் தந்துரைக்க.

"பொன்னார் புனைகழற் பூழியன் பூலந்தைப் பூவழிய
மின்னா ரயில்கொண்ட வேந்தன் விசாரிதன் வெண்திரைமேல்
முன்னான் முதலறி யாவண்ண நின்றபிரான் முசிறி
யன்னாய் பிரியேன் பிரியினும் ஆற்றே னழுங்கற்கவே"

பொன்னாலாக்கப்பட்டு ஆர்த்த கழலைஉடைய பூழியர் பெருமான் பூலந்தைப்போரில் பகை செறுப்பான் மின்னானார்த்த அயிலை ஏந்திய அரசன் ஆகிய விசாரி, வெள்ளிய அலைகள்மேல் நின்றுதன் உருவம் முழுமையும் அறியவொண்ணாப் பெருமைகொண்ட கடல்வடிம்பலம்ப நின்றகைதவன் ஆயவழுதிக்குரிய முசிறிஎன்ற ஊரைஒத்த பெருமை யுடையாய்; யான் நின்னிற்பிரியேன்; பிரியின் ஆற்றேன்; ஆகலின் அழுங்கற்க என்றாளும்.

பகையரசர் தம்முடிகொண்டிழைத்ததாகலின் 'பொன்னார் புனை கழல்' என்றான். கைதவன் பெருமையறியாக் கடலேபோல் யானும் நின் கவலையின் காரணமறிகிலேன் என்பான் 'முதலறியாவண்ணம் நின்ற பிரான் என்றான். ஏனையவும் விரித்துக்கொள்க;

இக்களவியில் அணங்கோடு சூளுற்றுக் கூறினான் என்பது. சூளுறவு செய்யுளிற் கூறியதில்லையால் எனின்;

"இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை"

எனச் சான்றோர் கூறியதனானும், மேல்சூள் கூறியதாக வரும் இச் செய்யுள் வழி இக்களவிக்கண் அல்லது சூள் கூறுதற்கு வேறோர் இடம் இன்மையாயினும் ஈண்டே அஃது கூறினான் என்பது;

இனிது நிகழ்வது யாதோவெனின்,

"இவ்வகைகேட்ட தலைமகள் 'எம்பெருமான் நின்னிற்பிரியேன் பிரியினும் ஆற்றேனாவல்' என்றானால், பிரிவு என்பதும் ஒன்று உண்டுபோலும்: எனக்கேட்ட தகைமையால் அது தம் காதலரைக் காணுதும் கேளாதும் கையின் அகன்று மெய்யின் நீங்குவது எனக்

கலங்கிக், கார்மருங்கின் மின்னுப்போலவும் நீர் மருங்கின் கொடி போலவும், தளிரும் முறியும் தழைந்து, குளிரும் தளிருங்கவினி ஏழா நின்றதோர் கவின்பெறு கொடிப்போலும் காரிகை கண்ணுடி மண்டிலத்து ஊது ஆவிபோலக்காண ஒளிமழுங்கிக் கனன்முன் இட்ட மெழுகுப் பாவைபோல மனமுருகிப் பசந்துகாட்டினள். காட்டியும் ஆற்றினள், யான் ஆற்ருவிடின் எம்பெருமானும் இறந்துபடும்என. அங்ஙனம் ஆற்றினளாது தீர்மையைக்கண்டு 'இவள் எவ்விடத்தும் தன் தன்மை என்பதொன்றிலள்; என் தன்மையளே போலும்' எனப் பெரியதோர் கழியுவகைமீதூரி நின்று வன்புறை என்பதோர் சொல் சொல்லும்"

என அழகுபட விரித்தார்

௫௫. வன்புறை.

"வன்புறை என்பது வற்புறுத்துவது. அஃதியாங்ஙனமோ எனின், அணித்து எம்இடம் என்பது. அதற்குச் செய்யுள்":-

"பாவலை யின்றமிழ் வேந்தன் பராங்குசன் பாழிவென்ற
ஏவலை வெஞ்சிலை யான்வஞ்சி யன்னுய் இனையலெம்மூர்த்
தூவண மாடச் சுடர்தோய் நெடுங்கொடி துன்னிநும்மூர்
ஆவண வீதியெல் லாநிழற் பாய்நின் றணவருமே."

பாடல்கள் நிறைந்த இன்பம்விரவிய தமிழ் வளர்க்கும் தோன்றலாவான் பராங்குசன் என்ற பெயரினன். பாழி என்னும் ஊரில் வெற்றி எய்திய அம்புகள்கோத்த கொடிய வில்லினன் ஆய மாறனுக்குரிமையெய்திய வஞ்சியென்னும் ஊரினை ஒத்த வஞ்சியாய்! எம்மூர் சேய்த்தோ அணித்தோ என இனையற்க. எம்மூரிடத்து தூய வண்ண வேலைப்பாடுகளைக்கொண்ட மாடங்களினின்றும் எழுந்து விண்ணிடத் தொளிர்தரும் சுடரினிற்சென்று தோய்தரும் நீண்ட கொடிகள் ஒன்றையொன்று நெருங்கியிருந்து நிழல்தந்து நும்மூர் ஆவணவீதிகள் ஆதவன் வெம்மையால் காயப்படாது காத்தோம்புவன. எம்மூர் நும்மூருக்கு அத்துணை அணித்தாம் என்றனனும். அணவருதல் என்பது அணித்தாய் நிற்றல். எம்மூர்க் கொடிகள் நும்மூர் அங்காடித்தெருவுக்கு அருள்செய்து வெயிற் கொடுமையினின்றும் காப்பன. அவ்வூர்சார்ந்த யாமும் நின்னுளத் துலைவு செயும் கவலையாம் வெம்மையை ஒறுக்கும் பண்பினம் என்பது தோற்றச் சொன்னன். "பாவலையின்றமிழ் வேந்தன்" என்றுன் அன்பணைந்து இன்பம் செய்வான் தலைமகன் என்னுங் குறிப்பினுல்.

"திணிநிற நீள்தோள் அரசுகத் தென்னறை யாற்று—மின்னூர்
துணிநிற வேல்கொண்ட கோன்தொண்டியன்னுய் துயர—லெம்மூர்
மணிநிற மாடத்து மாட்டிய வரன்சுடர் மாலை—நும்மூர்
அணிநிற மாளிகை மேற்பகல் பாரித் தணவருமே.

திண்மை செறிந்து போர்ப்பயிற்சியான். வேல், வில் முதலிய தாங்கிய பொறிவாய்ந்த நீண்ட தோளினை கொண்ட பகைஅரசர்

அழிய தெற்கின் கண்ணதாகிய நறையாற்றில் ஒளியார்ந்து ஊனிற் பாய்வதால் அந்நிறத்தையுமேற்ற வேலேயேந்திய அரசனுக்குரிய தொண்டி என்னும் ஊரினை ஒப்பாய்! நீ துயரற்க. எம்மூரிடத்துள்ள அழகியவண்ணமமைந்த மாடங்களில் மாட்டப்பட்ட வெள்ளிய ஒளி பொருந்திய மாலைகள் தங்களது ஒளி திரண்டு நும்மூர் அழகு நிரம் பியவண்ண மாடங்களில் பாய்வதால் பகல்விரித்தழகு செய்வன. அத் துணை அணித்தாமாகலின் அருமையில்லை என்றுனும். எம்மூர் வான் சுடர்மாலையால் நும்மூர் மாடங்கள் பயன்பெற்றாற்போல என்னால் நீயும் நீங்காது பயன்பெறுவை என்றானென்க "திணிநிற நீள் தோள்" பகையரசரின் வன்மை குறித்தெழுந்தது. அத்துணை வலிய அரசரை வென்றானின் ஊரில் வாழ்வாய். நீயும் இச்சிறு பிரிவை யாற்றும் வன்மையை இனைவாயல்லை என்றானும்.

"ஒன்றக் கருதா வயவர் நறையாற் றுடனழிந்து
பொன்றப் படைதொட்ட கோன்புன னாடனையாய் நுமர்கள்
குன்றத் திடைபுனங் காவலரிட்ட குருஉச்சுடரெம்
மன்றத் திடையிருள் நீக்கும் படித்தெங்கள் வாழ்பதியே"

தன்னடிபணிந்து ஒன்றிவாழக் கருதாது வெல்லுவது கருதி யெழுந்த வேற்றலர்கள் நறையாற்றருங்கு அழிந்து படும்படி தன்து படையினைத் தொட்ட அரசனது புனல் நாடுபொருவாய்! நுமர்களுக்குரிமையான குன்றத்திடை புனங் காவலர்கள் இட்ட கொழுந்துவிட்டெரியும் சுடரானது எம்மூர் மன்றத்துக் கண் யிருள கற்றி ஒளிபரப்பும்படியான அண்மைத்து எம்மூர். எனவே நின் அவலந் தணிக என்றானும். முற்செய்யுளில் தன்னால் தலைவி பெறும் பயன் கூறினான். இதனுள் தான் தலைவிபால் துய்த்த பயன் கூறினானாயிற்று

"சேலங் குளர்வயற் சேவூர் எதிர்நின்ற சேரலனை
மாலங் கடைவித்த மன்னன் வரோதயன் வஞ்சியன்ன
ஏலங் கமழ்குழ லேழையெம் மூரெழின் மாடததுச்சிச்
சூலந் துடக்குநும் மூர்மணி மாடத் துகிற்கொடியே."

சேல்கள் வாழ்கின்ற வயனிறைந்த சேவூரிடத்து எதிர்த்து நின்ற சேர வேந்தனை மயக்கமுற்று அழியச்செய்த அரசனும் வரத் தினால் உதயம் செய்தவனுமாகிய வழுதியர் பெருமானின் வஞ்சியன் னாய், ஏலங்கமழ்குழலாய்! ஏழை! எம்மூரிடத்து எழின் மாடத்துச் சிக்கண் பொருந்திய சூலத்தை நும்மூர் மணிமாடத் துகிற்கொடிகள் தீண்டுமளவி லெம்மூர் அணிமைத்தாம். இதனை அறிக என்றானும். எம்பெருமான் ஊர் அணித்தாமோ சேய்த்தாமோ. பிரியின் விரைவில் கூடுவனோ என அறியாமையால் ஏக்கமுற்றாளாகலின் 'ஏழை' என்றான்.

அங்ஙனங்கூறக்கேட்ட தலைமகள் எம்பெருமான் அணித்து எம்இடம்; அணியதாகலின் பல்கால் கேட்கவுங் காணவும் எளிமை யாம், அருமையில்லை என்கின்றானல். பலகால் கேட்பாருங் காண் பாரும் ஆற்றியுளர் ஆகாதே. அதனால் எம்பெருமான் என்னைத்

காண்டற்கும் கேட்டற்கும் ஆற்றியுளனும் போலும் என்றிவ்வகை எண்ணி ஆற்றுவாளாம். அங்ஙனம் ஆற்றுதலை அறிந்த பின்றைப் பிரிவானும்.

'இவாறும் பெருநாணினள். யான் பிரியாதுவிட இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனும். ஆகவே இவள் ஒரு தலையாக இறந்துபடும்' என்று இவ்வகை பிரிவச்சமும் வன்புறையும் சொல்லிப் பிரியுமாகலின் பிரிவும் அன்பினானே நிகழ்ந்தது என்பது.

அருமையறிதல்.

தலைவியின் அருமையதைத் தலைமகன் அறிதலைப் பின்வருமாறு கூறுவர் :

"இவ்வாற்றால் தலைமகளை ஆற்றிப் பிரிந்த தலைமகன் அவளைத் தமியளாக நீங்குமோ எனின் நீங்கான். அவள் தன்னைக் காணாமைத் தான் அவளைக் காண்பதோர் அண்மைக்கண், மழைக்கொண்டலுள் மின்னுப்புக் கொளித்தாற்போல ஒரு தழைப் பொதும்பரிடை மறைந்து நிற்கும் என்பது. அங்ஙனம் நிற்பத் தலைமகளும் தன் குழற்கற்றைப் பொறையும் கோவையும் துயல்வரக் கொடியிடை நடுவுதளரப், பரவை அல்குல துகிலசையப், பைம்பொற்றோடு மின்னுப்புடைப்ப, அரவவண்டறையுந் தாமரை யகவிதழ்புரையும் அஞ்செஞ்சீறடிமேற் செம்பொற் சிலம்பரற்ற அன்னம்போல மென்மெல ஒதுங்கிக் காமவல்லிக்கொடியும் கற்பகக்கொழுந்தும் நடப்பதென நடந்துசென்று அப்பனிவரைச் சாரல்அருகினது ஒருமணி யருவி மருங்கு ஒழுறுத்தப் பளிங்குவிளிம்படுத்த நீலப் பைஞ்சுனை மருங்கினதோர் மரகதச் சிலாவட்டத்தயல் மாணிக்கச் சதுரப் பாறைமேல் தாதுதவிசு விளிம்படுத்த மாதவிப்பந்தர்ப் போதுவேய்ந்த பூநாறு கொழுநிழல் இருந்தாள். இருந்தாளாகத், தாதும் தளிரும்போதும் மேதக்கனவற்றால் குறுங்கண்ணியும் நெடுங்கோதையும் விரவுத் தழையும் சூட்டுக்கத்திகையும் மோட்டுவலயமும் பிறவுமாகப்புனைந்து வண்டுந்தேனும் புடைமருட்ட அடியுறையென ஏந்திப், பிரிந்த ஆயம் பெயர்ந்தெய்திப் போற்றும பல்லாண்டும் கூறிநின்றார். நிற்ப அவளுந் தாரகை நடுவண் தண்மதிபோல்வதோர் பொலிவினளாய்க் காட்டினாள். காட்டினாளைக்கண்டு 'இவளை யான் எய்திலேன் எனக் கருதினன். எய்தியதுண்டேல் கனவே போலும்! நனவே ஆயினும் இவளெனக்கு எய்துதற்கு அரியளாம்' என ஆற்றானயினன்"

என உரையாசிரியர் நக்கீரர் தம் உரையின் எழில்நலம் உணர்ந்து உணர்ந்து இன்புறற்குரியது. நினைந்து நினைந்து நெஞ்சம் நிறைதற்குரியது. கூறிக்கூறி நாச்சுவை பெறற்குரியது, இவ்வண்ணம் அழகுபெறக்கூறும் இவர்தம் செந்தாப்புலமை என்னென்பேம்! என்னென்பேம்! நந்தமிழ் நாட்டுச்சிறார் தமிழைத் தக்கமுறையில் பயின்று இவ்வுரை யின்பத்தைத் துய்க்கும் நல்லூழ் பெறுவர்களாக! சங்கத் தமிழை இருப்புக் கடலையாக எண்ணும் இருள் இரிக! இரிக!! இரிக!!! சங்கத் தமிழே இன்பம் பொங்கும்

நடையாக எண்ணப்படுங்காலம் தொலையில் இல்லை. எளியநடை எளியநடை எனக் கூப்பாடுபோட்ட ஏழைமை ஒருவாற்றான் ஒரீஇப் போயது. நல்ல தமிழில் பேசவும் இன்பத் தமிழில் எழுதவும் மக்கள் மன எழுச்சிகொண்டுள்ளனர். புலவர்கள் பெரும்பான்மையினர் இவ்வண்ணம் செந்தமிழில் எழுதிவருதல்காண எளியேற்கு இறும்பூது உண்டாகிறது. சாதம், சலம், மாங்கல்யம் போன்ற அவச் சொற்கள் இன்று தமிழில் பெருவரவிற்றாயில்லையென எண்ணுங்கால் தமிழ்மொழிபெற்ற மறுமலர்ச்சி சிறிதன்று. பெண்கள் என்ற பொருளில் புகைவண்டி நிலையத்தினர் "ஸ்ரீகள்" என எழுதியுள்ளனர். அதனையே ஆண்கட்கும் ஸ்ரீயென அடைகொடுத்தெழுதல், தக்கதன்றாமன்றே! 'திரு' என்ற சொல்பெறுந்திருவும் பெரிதே! எனவே—தமிழ் மக்களாய்ப் பிறந்தார் அனைவரும் இனியேனும் இயன்றமட்டில் வடசொற்களைப் பயன்படுத்தும் பண்பற்ற செய்கையினின்றும் ஒரீஇ, தூயதமிழிலேயே எழுதுதலும் பேசுதலும் செய்யுங்கடப்பாட்டினர் என்பதை ஓர்ந்துணர்வார்களாக.

இனி, இவ்வகைகூறிய ஆசிரியர், இத்துறைக்கமைத்த பாடல்களாவன:—

"சினவேல் வலங்கொண்டு செந்நிலத் தேற்றதெவ் [வேந்தர்கள்போய்
இனவேய் நரல்குன்ற மேறவென் றோனிருந் தண்சிலம்பிற்
புனவே யனையமென் தோளிதன் னாகம் புணர்ந்ததெல்லாம்
கனவே நனவாய் விடினுமெய் தாதினிக் கண்ணுறவே"

உருத்தெழுகின்ற வேலின் வலத்தைக்கொண்டு செந்நிலம் என்ற ஊரின்கண்வந்து மாறுஏற்ற மாற்றலராய அரசர்கள் புறங்கொண்டோடி கூட்டமாக வளர்ந்துள்ள மூங்கில்கள் ஒலிசெய்கின்ற குன்றத்தேறி ஒளிக்கும்படி வென்றானுடைய வழுதியின் பெரிய குளிர்ச்சி பொருந்திய மலையினிடத்துப் புனத்தேவளர்தரும் வேயினை ஒப்பாகிய மெல்லிய தோளையுடையாளது மெய்யுற்றுப் புணர்ந்தேனென்று புகுந்ததெல்லாம் கனவேயாம். அற்றன்று அஃது நனவேயென்றுபுகினும் இனிக் கண் உறவுகூட எய்தாது என்றானும்.

வழுதிக்கு கண்ணுற வெய்தாவண்ணம் தெவ்வரசர் சென்று இனவேய் நரல்குன்றத்தொளித்தாலென்ன இவளும் இனிஎனக்குக் கண்ணுறவெய்தா வண்ணம் ஆயமகளிரிடை யொளித்தாள் என்றானும். தோளைக்கூறினான் கூட்டம் பெற்றமை நோக்கி.

"இருநிலங் காரண மாக நறையாற் றிகன்மலைந்த
பொருநில வேந்தரைப் பொன்னுல காள்வித்த பூழியன்வேற்
பெருநிலங் காவலன் தென்புன னாடன்ன பெண்ணணங்கின்
திருநலஞ் சேர்ந்ததெல் லாங்கன வேயென்று சிந்திப்பனே"

மாறன் பயங்கெழு மாநிலம் பொதுவெனப் பொருத்தன்மையான் நறையாற்றிலே இகல்வேட்டெழுந்த பூவரசரைப் பொன்னுலகரசராக்கிய புகழ்மிக்க வேல் கொண்ட இப்பெரிய நிலக் காவலனின் தென்புனல்நாடன்ன பெண்ணணங்கின் திருநலம் புதி

துண்டோமெனப் புந்தியிலெண்ணிய தெல்லாம் கனவே போலும். இவ்வகைதான் சிந்திப்பேன் என்றானும்.

பூவுலகுகருதி போர்க்கெழுந்தார்க்குப் பொன்னுலகு தந்தமைவு கொண்ட பூழியனேபோல இவளது புதுநலங்கருதி இனைபுற்ற எனக்குயான் அரியளென்பது காட்டினாள்; அண்மையாளென்று கருதினனைச் சேய்மையாள் எனச் சிந்தை செய்வித்தாள் என்பது கருத்து.

"கையேர் சிலைமன்ன ரோடக் கடையற்றன் கண்சிவந்து
நெய்யே ரயில்கொண்ட நேரியன் கொல்லி நெடும்பொழில்வாய்
மையேர் தடங்கண் மடந்தைமெல் லாகம் புணர்ந்ததெல்லாம்
பொய்யே யினிமெய்ம்மை யாயினு மிலலைப் புணர்திறமே"

கரங்களில் அழகிய சிலைகொண்ட மன்னர்கள் புறங்கொடுக்கும் படிக் கடையலில் தன்கண் சிவப்பேற நெய்யணி செய்யும் வேல் கொண்ட நேரியனின் கொல்லிச்சாரலின் நீண்ட பொழிலகத்து மையுண்ட தடங்கண் மடந்தை தன் மெல்லிய மெய்யினையுற் றின் புற்றதெல்லாம் பொய்யே. அஃது மெய்யேயாயினும் கூட்டமுறும் வகை இனியில்லை என்றானும்.

அழகிய சிலை யென்றூர் அஃது வளைந்து வேற்றுரை வெறுமையின் இவ்வகை நினைந்த தலைமகன் இனி இவ்வொழுக்கம் கைகூடா தென்று கருதுவானாயின் வரையும். அன்றிப் பின்னும் அவளைப்புணர் திறம்யாதோ என்றே புகுவானெனிற் கூட்டத்திற்கே முயல்வானும். அவ்வகை நினைந்து நீங்குவான் ஆயத்தோடுஞ் செல்லாநின்ற தலை மகளை நோக்கிச் செல்லும் துறைக்குத் தரப்படும் செய்யுட்கள் ஆமாறு :—

"தேயத் தவருயி ரைப்புல னன்றென்பர் செந்நிலத்தைக்
காயக் கனன்றெதிர்ந் தார்மரு மத்துக் கடுங்கணைகள்
பாயச் சிலைதொட்ட பஞ்சவன் வஞ்சிப்பைம் பூம்பொழில்வாய்
ஆயத் திடையிது வோதிரி கின்றதென் னுருயிரே"

தேயத்தவர் உயிரைப் புலனன்று என்பர். செந்நிலம் என்ற ஊரை அழிக்கக்கனன்று, எதிர்ந்தார் தம்மார்பகத்து விரைந்த செலவினை யுடைய பகழிகள் சென்று ஊடுருவும்படி சிலைதொட்ட பஞ்சவன்றன் வஞ்சிப்பதியின்கணுள்ள பசுமையான பூக்கணிறைந்த பொழிலகத்தே ஆயத்தாரிடை திரிகின்ற இவ்வுருவம் என்றன் அரிய உயிரேயாகும் என்று உணர்ந்தானும். இச் செய்யுளோடு கீழ்க்கண்ட செய்யுளை ஒப்பு நோக்குக.

"அகிலேந்து கூந்த லொருகையி லேந்தி யசைந்தொருகை
துகிலேந்தி யேந்துந் துணைச்சிலம் பார்ப்பத் துளிகலந்த
முகிலேந்து பூம்பொழில் சூழ்தஞ்சை வாணன்முந்
(நீர்த்துறைவாய்
நகிலேந்து பூங்கொடி பொற்செல்லு மானெஞ்ச நம்முயிரே.

(தஞ்சை வாணன் கோவை – 27)

இனி, அடுத்த செய்யுள் :—

" இன்னுயிர் கண்டறி வாரில்லை யென்ப ரிகல்மலைந்தார்
மன்னுயிர் வான்சென் றடையக் கடையலுள் வென்றுவையந்
தன்னுயிர்.போனின்று தாங்குமெங் கோன்கொல்லித்
தாழ்பொழில்வாய்
என்னுயி ராயத் திடையிதுவோநின் றியங்குவதே "

மக்கட்கு யாவற்றினும் இனிதாகிய உயிரைக் கண்டறிந்தார் இவ்வுலகத்தில்லை யென்று பேசுவர். ஆயின் யான் கண்டறிந்தேன். அதனைக் கூறுகின்றேன். தன்னோடு மாறேற்று மலைந்தார் தங்களது நிலைபெற்ற உயிர் வானகம் சென்று அடையும்படிக் கடையல் என்ற ஊர்க்கண்ணே ஒன்னாரைப் பொருதுவென்று இந்நிலவுலகத்து வாழ் மன்பதைகளைத் தன்னுயிர் நேர்என இருந்து ஓம்புதலைச் செய்கின்ற எமது அரசனின் கொல்லி வரை தாழும் அளவிற்கு உயர்ந்ததோர் பொழிலகத்தே ஆயமகளிர்புடைசூழ் நின்றியங்குவதோர் உருக்காண்பீர். கண்டீரேல் அஃது என் உயிரென்பதை அறிக

உடம்பே அழிவது உயிர் அழியாமைத் தன்மைத்தாகலின் மன்னுயிர் என்றான். அரசன் மக்களுயிரைத் தன்னுயிரெனத்தாங்குவதொப்ப, தலைவியும் அவனுயிரைத் தாங்குவாளாய் நின்றாள். இச்செய்யுளோடு பின்வருவதை ஒப்பிடுக.

" காணா மரபிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅம் காண்டுமெம் அரும்பெற லுயிரே
சொல்லும் ஆடும் மென்மெல இயலும்
கணைக்கால் நுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே "

(தொல்காப்பியம்—களவியல் : ௧௦௧ மேற்கோள்)

இவ்விரு பாடல்களிலும் யாதொரு வேற்றுமையுங் காணாமையும் நோக்குக. இதனால் களவியலுரையாசிரியர் இப்பழம்பாட்டை நினைவிற்கொண்டே இச்செய்யுள் யாத்தனர் என்பது போதரும்.

இனித் தலைமகன் செய்வதோர் வினைபற்றிக் களவியலுரைகாரர் கூறுமாறு:

"இவ்வாறு சொல்லி இனி இவளைக் கூடுதல் கைகூடாதென் ஆற்றானாயினன். அவ்வாற்றாத் தன்மை ஆற்றுவது ஒன்றனைப் பற்றும். ஆற்றுவது யாதோ எனின், தான் எய்திய ஆரணங்காகிய அவ்வுருவினை நினைந்து, தான் எய்தும் உபாயமாவது தன் காதற்றோழனை இதுகொண்டு முடிக்குங் கொல்லோ என்பது. அது பற்றுக்கோடாக ஆற்றி நீங்கும் என்பது "

என்பர். இனி இடந்தலைப்பாடும் பாங்கற் கூட்டமும் மூன்றாவது நூற்பாவில் நுவலப்படுவனவாம்.

இரண்டாம் நூற்பாவிற்கு இத்துணைவிரிந்த அளவில் உரைகூறி நமக்கு மெய்யுணர்வு கொளுத்திய ஆசிரியர் பெருமான் நக்கீரருக்கு நாம் தலைதாழ்த்தி வணங்குவோமாக.

வானநூற் கலைஞர்

தி. வேங்கடராமன் பி. ஏ., பி. டி., சேலம்.

வானநூல் மிகப்பெருகி வளர்ந்துள்ள காலம் நம்காலம். எல்லையற்ற, முடிவில்லாத விண்ணில் இயங்கும் கோள்களையும், விண்மீன்களையும் ஆய்வதற்குக் கோடிக்கணக்கில் பொருள் செலவிட்டு ஆய்வுக்கூடங்கள் அமைத்து, அதன்கண் எண்ணற்ற ஆய்வாளர்கள் அண்டங்களின் ஆழங்காண இயலா உண்மைகளை அம்பலம் ஏற்றும் விஞ்ஞானப் பெருங் கருவிகள்கொண்டு ஆய்வதற்கும், அதனைப் பலரும் அறிய வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்புகள் இற்றை நாளில் உண்டு. இது இன்றைய நிலை.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் நிலவிய நிலை வேறு. பண்டைக்காலத்து ஆய்வுகள் நடத்தத் தனிக்கூடங்கள் இல்லை. இத்துணைப் பெருங்கருவிகள் இல்லை. இவைபோன்ற வசதிகளும் இல்லை. இருப்பினும் வானிலை, கோணிலை ஆகிய துறைகளில் பண்டையோரும் நம்மனோர் போன்ற திறமும், தெளிவும் படைத்திருந்தனர். வானநூற் கலைஞர் அரண்மனையில் இருந்து வானத்து விளங்கும் கோள்களின் நிலைகளையும், காலத்தின் அமைப்பினையும் ஆய்ந்து அறிந்து கூறினர்.

வானநூல் கலைஞர் யார் ?

வானநூல் கலைஞர்களைப் பண்டைத் தமிழர் 'காலக் கணிதர்' என்றும், 'கணி' என்றும் அழைப்பார்.

"வினைவெல்லாம் கண்ணணி யுரைப்போன் கணி"

என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுகின்றது. பின்வரும் விளைவுகளை யெல்லாம் முன்கூட்டியே வானை நோக்கி அறிந்துக் கூறுபவன் கணி. கணியன் பூங்குன்றனர், பக்குடுக்கை நன்கணியார் போன்ற பல பெருங்கணிகள் இருந்தனர்.

காலக் கணிதர்

வானக் கலைத்துறையில் ஈடுபட்டவர்களை மக்கள் எனவும், மாக்கள் எனவும் இரண்டு பிரிவாக வகுத்தார்கள் பண்டைத் தமிழர் மக்களாவர். சூரியன் முதலியவற்றை நேரேசென்று கண்டுவந்தாற் போல உண்மையை எடுத்துக்கூறி விளக்கும் ஆராய்ச்சியாளர் ஆவர். இவரைக் 'காலக்கணிதர்' எனக்கூறுவர். அந்நாளில் அரசவையில் அரசரோடு வீற்றிருக்கும் ஐம்பெருங் குழுவில் காலக்கணிதராம் பெருங்கணியும் ஒருவர். இவரை

"ஆறிரு மதியினும் காருகவடிப் பயின்று
ஐந்து கேள்வியும் அமைந்தோன்" (சிலம்பு)

என இளங்கோவடிகள் பாடுகின்றார்.

இக் காலக்கணிதர் பகலும் இரவும் இடைவிடாமல் வானத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும், மின்னும் ஊர்க்கோளும், தூமமும், முன்விழ்வும், கோணிலையுங்கண்டு எடுத்துக் கூறுவோர் ஆவர்:

நாழிகைக் கணக்கர்

வானக் கலைத்துறையில் மாக்களெனப்படுவோர் வேலைக்காரர் போன்றோர் ஆவர். 'இவர்களை நாழிகைக் கணக்கர்' எனக் கூறுவர். இவர்கள் கிளிப் பிள்ளைபோலப் பஞ்சாங்கம் ஓதுவோரைப்போலவும் மணியடிப்பார் போலவும்

" பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு
காமன் திரியுங் கடுவூர ! — யாமங்கள்
ஒன்றுபோய், ஒன்றுபோய், ஒன்றுபோய், நாழிகையுள்
ஒன்றுபோய், ஒன்றுபோய், யொன்று "

என்று நாழிகை அறிவிப்பார்கள் என்று விளக்குகின்றார். அடியார்க்கு நல்லார், இவர்கள் வானக்கலைஞர் அல்லர் மாக்கள் என நப்பூதனார் என்றும் புலவர் இழித்து உரைக்கின்றார் " பொழுதளந்தறியும் பொய்யா மாக்கள் " என்று அவர் முல்லைப்பாட்டில் குறிப்பிடுகின்றார்.

கணிவன் முல்லை

காலக்கணிதர் புகழைப் பண்டைப் புலவர்கள் 'கணிவன் முல்லை' என்ற துறையாகப் பாடினார்கள். இதனைப் புறப்பொருள் வெண்பா மாலையினின்று நாம் அறியலாம். கணிவன் முல்லை என்பது வாகைத் திணையில் ஒருதுறை யாகும். இத் துறையால் வானநூல் கலைஞரின் புகழினை நாம் நன்கு அறியலாம்.

கோள்நிலை அறிவோர்

வானத்து விளங்கும் கோள்களின் நிலைகளையும் காலத்தின் அமைப்பையும அறிந்துகூறும வானநூல் கலைஞர்களும், கோள்நிலை அறிவோரும ஐமபெருங் குழுவில் ஒருவராக இருந்து ஆய்ந்தனர்.

நாள்மீன்களையும் தாரகைகளையுமுடைய சுடர்ச் சக்கரத்தைப் பொருந்திய ஆதித்தன் முதலாக வரும் கோள்களது நிலைமையை அறிவோரும் பண்டைத் தமிழகத்தே இருந்தனர்.

" என்றூ ழுறவரு மிருசுடர் தேமி
யொன்றிய சுடர்நிலை யுள்படுவோர் " (பரிபாடல்)

என்றும் விழுமிய பாடலடிகளால் கோள்நிலை அறிவோரைப் பற்றி உணரலாகும்

" குணதிசை நின்று குடமுதற் செலினும்
குடதிசை நின்று குணமுதற் செலினும்
வடதிசை நின்று தென்வயிற் செலினும்
தென்திசை நின்று குறுகாது நீடினும்
யாண்டும் நிற்க வெள்ளி ; யாம்
வேண்டியது உணர்ந் தோன்தாள் வாழியே ! (புறம் 386)

வெற்றி எங்கும்நிற்க யாம் வேண்டியது உணர்ந்து சுபவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்றும் கோவூர் கிழாரின் பாடற்பகுதியால் கோள்நிலை பற்றிய பண்டைத் தமிழர் அறிவியல் எல்லை ஒருவாறு தெளியப்படும்.

வானக் கலைஞர்:—

செஞ்ஞாயிற்றின் செலவும், அஞ்ஞாயிற்றின் இயக்கமும், இயக்கத்தால் சூழப்படும் மண்டிலமும், காற்றுச்செல்லும் திசையும், ஆதாரமின்றி நிற்கும் வானமும் என்றிவற்றைத் தாமே அவ்வவ்விடம்சென்று அளந்து அறிந்தவர்போல இஃதிஃது இப்படிப்பட்டது என உரைக்கும் அறிஞர்கள் பண்டைக் காலத்தும் இருந்தனர்.

"செஞ்ஞா யிற்றுச் செலவும்
அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்தமண் டிலமும்
வளிதிரி தரு திசையும்
வறிதுநிலைஇய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
இனைத்து என்போரும் உளரே" (புறம்)

சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடிய பாடலின் பகுதி மேற்கண்டது. பண்டைத் தமிழரது வானூலறிவும், வானக்கலையும் இதனால் அறியலாகும்.

கூடலூர் கிழார் :—

சங்கப் புலவர்களில் சிலர் கணியர்களாகவும் இருந்தனர். அவர்களில் கூடலூர் கிழார் என்ற புலவரும் ஒருகணி. அவர் மலைநாட்டுக் கூடலூரைச் சேர்ந்தவர். வானநூலிலே தேர்ந்த புலமையுடையவர். சோதிடக் கலையினை நம்பும் இயல்பினர்.

பங்குனி மாதத்தில் வானத்திலிருந்து ஓர் எரி நட்சத்திரம் கீழ் நோக்கி வீழ்ந்தது. அதனைப் புலவர் பெருமானும், அவருடன் சென்ற இரவலரும் கண்டனர். எரிகொள்ளி வீழ்ந்ததனால் பகைவரைப் பிணித்து வெற்றிகொள்ளும் வளமிகுந்த மலைநாட்டு வேந்தன் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை நோயுடையவனாகாது இருநதானாயின் நன்றுஎன உள்ளம் கலங்கி அச்சங்கொண்டனர். விண்மீன் வானத்திலிருந்து விழுவது தீயது என்பது பண்டையோர் கருத்து. புலவர் கணியாதலின் அதன் வினைவினை ஆராய்ந்து விண்மீன் வீழ்ந்த ஏழாம்நாள் தீது நிகழும் என்று உணர்ந்தார். எண்ணியவண்ணமே ஏழாம்நாள் மன்னவன் சேரல் இரும்பொறை விண்ணாடு புக்கான். இதனை அவர் 229-ஆம் பாடலில் குறிப்பிடுகின்றார்.

"ஆடிய லழற் குட்டத்
தாரிரு ளரையிர வில்
முடப் பனையத்து வேர்முதலாக்
கடைக் குளத்துக் கயங் காயப்

பங்குனி யுய ரழுவத்துத்
தலைநாண்மீ னிலைதிரிய
நிலைநாண்மீ னதனெதி ரேர்தரத்
தொன்னாண்மீன் றுறைபடியப்
பாசிச் செல்லா தூசிமுன்னு
தளக்கர்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பினானே
அதுகண்டு" (புறம்)

என்னும் புறப்பாடலின் இம் முற்பகுதியையும், அதன் உரைப் பகுதியையும் ஆராய்வதால் பலவான நூல் கருத்துக்கள் புலனாகின்றன.

ஆசிரியர் நல்லந்துவனார் :—

ஆசிரியர் நல்லந்துவனார் என்பவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். இவரது ஊர் மதுரையாகும். இவர் பரிபாடல் என்னும் இலக்கிய நூலில் 11-ஆம் பாடலை இயற்றியவர். அப் பாடலின் முதல் பதினைந்து அடிகளையும், அதன் பொருளையும் உற்றுநோக்கின் பற்பல கோள் நிலைகளையும், வானநூற் கருத்துக்களையும் அறியலாம் நல்லந்துவனாரின் வானநூல் புலமையையும் நாம் அறியலாம்.

" விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
வெரிசடை யெழில்வேழந் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் றொன்பதிற் றிருக்கையு
ளுருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடிய
லங்கி யுயர்நிற்ப வந்தணன் பங்குவி
னில்லத் துணைக்குப் பாலெய்த விறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதிய மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுன மடைய விரிகதிர் வேனி
லெதிர் வரவு மாரியியை கெனவிவ் வாற்றாற்
புரைகெழு சையம் பொழிமழை தாழ" (பரிபாடல்)

விசும்பு மதியத்தோடு புணர்ப்பவாகிய எரியும், சடையும் வேழமு முதலாக அவற்றின் கீழிருந்து வீதியால் வேறுபடுக்கப்பட்ட ஒரோன்று ஒன்பது நாளாகிய மூவகை இராசிகளுள், வெள்ளி இடபத்தைச் சேர, செவ்வாய் மேடத்தைச் சேரப், புதன் மிதுனத்தைச்சேரக், கார்த்திகை உச்சமாக விடிதலுண்டாக வியாழம் சனியின் இல்லமிரண்டாகிய மகர கும்பங்களுக்கு உப்பாலை மீனத்தைச் சேர, யமனைத் தமையனாகவுடைய சனி வில்லுக்குப் பின்னாகிய மகரத்தைச் சேர, இராகு மதிய மறைக்கும்படி வருநாளின்கண் அகத்திய னென்று மீன் உயர்ந்த தன்னிடத்தைக் கடந்து மிதுனத்தைப்

கல்வி அமைப்பு

மா. இரத்தினம்.

ஒரு நாட்டின் அறிவுவளர்ச்சிக்கும்—நாகரிகவளர்ச்சிக்கும்—பெருளாதார வளத்துக்கும்—வாழ்க்கைச் செழிப்பிற்கும் முன்னேற்ற விதிகளை உருவாக்கும் காரணியாகக் கல்வி அமைப்பு விளங்கி வருகிறது. கல்வி அமைப்பின் செழுமையிலும் உண்மையிலுமிருந்து தான் அந்நாட்டின் தேசியம் வரலாறு, ஒற்றுமை, சுதந்திரம் என்பவை முழுமைபெற்றுத் தொன்னெடுங்காலமரபுணர்ச்சியும் தனித்தன்மையும் வீறுகொண்டு வளர்ச்சியடைந்து செல்லத்துணை புரிகிறது தேசீய சுதந்திர கல்வி அமைப்பு தவிர்க்கமுடியாத—மக்களை எல்லா உண்மைகளிலிருந்தும் விலக்கி வைக்கமுடியாத—நாட்டோடு உள்ளத்தையும் உணர்ச்சியையும் இணைத்து—பிணைத்து பிரிக்க முடியாத பற்றையும் உறுதியையும் ஒற்றுமையையும் ஏற்படச் செய்கிறது.

தாயகவரலாற்று உண்மைகளிலிருந்து தேசீய சுதந்திர உரிமை சித்தாந்தங்களிலிருந்து வேறுபடாத கல்வி அமைப்புதான் தாயகத்தில் பிறந்த ஒவ்வொரு பிறவியையும் உண்மையான ஆற்றல்மிக்க பிறவியாக்குகிறது. தாய் நாட்டின் தொன்னெடுங்கால இன வாழ்வின் வளர்ச்சியில் உருவாகிய நாகரிகம், தொழில், பண்பாடு, வரலாறு, கலைத்துறைகள் யாவற்றையும் கல்வி அமைப்பின் வாயிலாக நிகழ்காலத்தலைமுறையினர் தம்முன்னோர்களின் உள்ளத்தோடு உணர்ச்சியோடு சித்தனையோடு நாகரிகத்தோடு உயரிய பண்போடு தொடர்புகொண்டு தாயகத்தின் தனித்தன்மைகளையும் பெருமைகளையும் மங்கி மறையாமல் காத்துத் தொடர்ந்த மரபு வளர்ச்சியை

217-பக்கத் தொடர்ச்சி

பொருந்த முறுகின வெயிலையுடைய முதுவேனிற்குப் பின்வரும் கார் காலத்து மழைபெய்கவென்ற இவ் விதி வழியால் உயர்ந்த சைய மலைக்கண் மழை பெய்ய" என்பது இதன் பொருள். ஆசிரியர் நல்லந்துவனார்கூறும் இவ்வான நூல் கருத்துக்கள் பண்டைத் தமிழரின் வானநூற் புலமையை நன்கு உணர்த்தக் கூடியதாக அமைந்துள்ளது.

இதுகாறும் கூறியவற்றால் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழர் வான நூல் கலையில் சிறந்து விளங்கினர் என்பதும், கூடலூர் கிழார், ஆசிரியர் நல்லந்துவனார் போன்ற வானநூல் கலைஞர்கள் இருந்தனர் என்பதும் நன்கு விளங்கும். வானக் கலைஞர்கள் வானத்தைக்கண்டு ஆய்ந்து கூறிய இலக்கியச் செய்திகள் அன்றே அவர்கள் அறிவியல் திறம்படைத்து வாழ்ந்தனர் என்பதனை எடுத்துக்காட்டும்.

நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் உருவாக்குகிறார்கள். சுதந்திரக் கல்வி அமைப்பின் வாயிலாகப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளில் வாழ்ந்த தம் முன்னோர்களோடு இளம் குழந்தைகள் தங்கள் உள்ளத்தையும் உணர்ச்சியையும் தொடர்பு படுத்தி பிணைக்கப்பட்டு குறைந்த கல்விக்கால வயதில் தனிமரபின் பெருமைகளை உணர்ந்து நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் தம் முன்னோர்களின் ஆணை வழி தனித்தன்மைகளோடு வாழச் சிந்தித்துச் செயலாற்றக் கற்றுக் கொள்கின்றனர்.

இவ்வாறு தாயகத்தின் தனி மரபு கல்விவாயிலாக அறிவும் சிந்தனையும் பண்பும் செழுமையடைந்த குழந்தைகள் உள்ளத்தில் தான் தாய் நாட்டின்மீது எல்லையிலாப் பற்றும் அன்பும் மதிப்பும் ஏற்படும். வளமான தனிமரபு கல்விஅமைப்புதான் தாயகத்தின் மீது உணர்ச்சி வயமான பற்றும் மதிப்பும் மக்களுக்கு ஏற்படுத்தி அதன் அனைத்துக் கலைகளையும தொழில்களையும் காத்து நாகரிக வளர்ச்சிகளை உருவாக்கச் செய்கிறது.

தேசீய சுதந்திரக் கல்வி முறை என்பது ஒரு நாட்டின் வன்மை மிக்கபாதுகாப்புக்கருவியாகவும் உணர்ச்சிப்படைப்புக்கருவூலமாகவும் பல்வகை மனித ஆற்றல்களின் பிறப்பிடமாகவும் அறிவு சிந்தனை யின் வளர்ப்பிடமாகவும் இனவாழ்வின் ஒற்றுமை—கட்டுக்கோப்புக் குரிய நெறியாகவும் விளங்குகிறது. தாய்நாட்டின் இயற்கை, தனி மரபு, வரலாறு, சுதந்திரம் என்பவைகளின் அடிப்படையின் மீதுதான் மாபெரும் கல்வி நிலையங்களின் கட்டுமானங்கள் எழும்புகின்றன: இந்த இயற்கை கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டப் படாத கல்வி நிலையங்கள் ஒரு நாட்டில் தனி மரபுக்குப் பகையாக நெடுங்காலம் நிலைத்து வாழ்ந்து மக்களின் மதிப்பையும் பாது காப்பையும் பெற முடியாது.

கல்வி முறையின் உண்மை, நேர்மை, நீதி யாவும் இனவாழ்வின் உள்ளார்ந்த தன்மைகளுக்கு முரண்பட்டு விளங்குமானால் ஆழ்ந்த முறையில் சுதந்திர வாழ்விற்குப்பகையாகவும் தீங்காகவும் இருக்கும். இனவாழ்வின் தனிமரபுத்தன்மைகளை வளர்த்துவாழும் இயல்புள்ள மனிதன், கல்வி முறையை மிக்க கவனமாகவும் அறிவுடனும் அமைத்துத் தங்கள் இளந் தலைமுறையினரைத் தங்கள் வழியிலும் தங்கள் முன்னோர்கள் வழியிலும் வாழவைக்க வேண்டியதைக் கடமை யாகக் கொண்ட மனிதன் தன்னுடைய நாட்டின் அழிவுக்கான கருவியாக அதைத்தவறான முறையில் அமைக்கமாட்டான். தன்னுடும் நாகரிகமும் இனமும் இனவாழ்விற்குரிய அனைத்துக் கலைகளும் வாழ வேண்டும் வளரவேண்டும் பயன்தரவேண்டும் நிலைபெற்று அழியாம லிருக்க வேண்டும் என்று கருதும் மனிதன் கல்வி முறையை அரசாங்கத்தின்—நாட்டின்—இனத்தின்—வரலாற்றின்—சுதந்திரத் தின் ஒரு பகுதியாக இணைத்து அவற்றின் தனித்துவத்தைப் பாது காக்க விரும்புகிறான். கல்வி முறையை என்றும் இவ்வைந்திற்கும் புறம்பான வேற்றரசு—நாடு—இனம்—வரலாறு—சுதந்திரம் என்ப

வைகளோடு இணைத்து விட்டால் நாட்டின்—இனத்தின் உள்ளமும் மூளையும் நைந்து தொய்ந்து அழுகிய உணர்ச்சிகளின் பிறப்பிடமாகி விடும். நாட்டின் மக்கள், தலைவர்கள், அறிவுமேதைகள், யாவரும் கல்வி முறையின் தூய்மையையும் செழுமையையும் உண்மையையும் ஆற்றலையும் முழுமையாக உணர்ந்து அவை நாட்டின் எல்லா துறைகளோடும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலங்களையும் தொடர்புபடுத்தும் இணைப்புக் கருவியாகவுமிருப் பதை உள்ளத்தில் வைத்து தன்மானம், சுதந்திரம், தாய்நாட்டுப் பற்று என்ற அன்பு சுரக்கும் நீதி சுதந்திர நெஞ்சத்தோடு பல்லாயிரக்கணக்கான இளம் குழந்தைகளை வீறு கொண்டெழச் செய்யத்தக்க முறையில் அமைக்கும் கடமைமிக்கவர்களாவர்.

இந்த நீதி முறைகளிலிருந்து மாறுபட்டு கல்வி முறையை அமைத்தால் நாடும் இனமும் நல்வாழ்வும் சுதந்திரமும் எவையும் தனித்துவத்தையும் புகழையும் பெருமையையும் அடைய முடியாது. கல்வி முறையிலே வேற்றின அரசியல் சூழ்ச்சிகள்—பேராசைக் கனவுகள் கருக்கொண்டு இளம் உள்ளங்களை தாயக வரலாற்று பூர்வீகான சுதந்திர உண்மைகளிலிருந்து வேறுபட்டு வளரும் தன்மைகளை உருவாக்கி குற்றவாளிகளாக்கி விடுகின்றன. உலகில் மண்ணாசை—அரசியல் வெறிபிடித்த வேற்றின அரசுகள் ஒரு நாட்டின் கல்வி நிலையங்களைக் கைப்பற்ற கலவி முறைகளை தங்களுடைய கொள்கை குறிக்கோளுக்காக சூழ்ச்சி மயமான முறையில் அமைத்து இளம் குழந்தைகளை இளமையிலிருந்தே தாயகப்பற்றுவரலாற்று உண்மைகளை மறக்க செய்து விடுவதன் மூலம் ஆதிக்கத்தை எதிர்ப் பின்றி எளிதாக நடத்தவும் நிலை நிறுத்தவும முயலுகிறார்கள். மக்களையும் மாணவர்களையும் ஆதிக்கவாதிகளின் சார்பாக அடிமைப் பற்றுடையவர்களாக இருக்க செய்து அவர்கள் உள்ளத்தில் அமைதி ஒன்றி-அடிமை மனப்பான்மை என்ற மூன்று தன்மைமிக்க உணர்ச் சிகளையும் தோற்றுவித்து விடுகின்றனர். இதற்குமேல் அடிமை மக்களிடமிருந்து வேறெந்த உணர்ச்சிகளையும் எழுச்சியையும் சிந்தனையையும் ஆற்றலையும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை.

இவ்வாறு வேற்று நாகரிக அரசியல் வளர்ச்சிக்காகவும் கொள்கைக்காகவும் தாய் நாட்டில் தீங்கான கல்வி முறையை அமைத்து இளம் தலைமுறையினரை உள்ள வலிமையற்ற-உணர்ச்சி ஊற்றுகளற்ற பிண்டங்களாக உருவாக்கி கல்விமுறை வாயிலாக அவர்கள் தங்கள் முன்னோர்களின்-தாயகத்தின் எல்லா தேசிய உண்மைகளோடும் உணர்ச்சிகளோடும் சிந்தனைகளோடும் தொடர் பற்று தாயகம் உணர்ச்சியையும் பற்றையும் இழந்துவிடச் செய்து விடுகிறார்கள். இளமையில் தவறான கருத்துக்களால்-கல்வியால் வளர்க்கப்பட்ட இவர்கள் வயது வந்த பின்னரும் தன் தாய்நாட்டை பற்றி எவ்வளவு பெரிய வரலாற்று உண்மைகளைக் கற்றாலும் கேட் டறிந்தாலும் அவைகள் அவர்கள் உள்ளத்தில் வேர் பிடித்து வளர்ந்து பற்றையும் அர்ப்பணிப்பு உணர்ச்சியையும் உண்டாக்காது

இளமையில் கற்ற குற்றமிக்க கருத்துக்களின் வழியே வாழ முற்படுகின்றனர். வேற்றின அரசாக விருந்தால் இளமையில் குழந்தைகளைத் தன் ஆதிக்கப் பேராசைகளுக்குச் சார்பாக வளர்ப்பது சுதந்திர தாயக அரசாக விருந்தால் தன்னுடைய நாட்டுத்தனித்துவத்தைப் போற்றும் பற்றும்வன்மையும் அறிவும் ஆற்றலும் உடையவர்களாக வளர்ப்பதுஎன்ற இருவேறு பட்டவகையில் கல்விமுறை ஆட்சியாளர்களால் உலக நாடுகளில் உருவாக்கப்பட்டு வருவதை காணலாம்.

ஆளுவோர் வெறுப்பு, விருப்பு, நோக்கம்; கனவு, பயன் இவைகளை அடிப்படையாகக் கொண்டுதான் கல்வி முறை பெரும்பாலும் உருவாக்கப்பட்டு கல்வி நிலையங்களில் கருத்து வேற்றுமை, அறிவு பெருக்கம், பொறுமையுணர்ச்சி என்பவைகளுக்கு இடமில்லாமல் ஒரு சார்பான கொள்கை, கருத்து பழிவாங்கும் வெறியுணர்ச்சிகளுக்கு நிலைக்களனாக அமைத்து விடுகிறார்கள். வேற்றின நாகரிகம் தொழில்துறைகள், கலைத்துறைகள், இயற்கை, வரலாறு, மொழி இவைகளிலிருந்து கல்வி முறையை அமைத்து இளம் குழந்தைகளை அறிவுமேதலிக்க செய்து முன்னேறுவதற்குரிய வாய்ப்புகளிலிருந்து தவறி விடுகிற இறுக்கமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி விடுகின்றனர். கல்வி நிலையங்களில் மாணவ மாணவியர் முன்னேறுவதற்கும் அறிவு வளர்ச்சிக்குமான வாய்ப்புகள் எளிதாக்கப்படுவதில்லை. தாயகத்தின் இயற்கை, தொன்னெடுங்கால தொடர்பில் வரலாற்றின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வளர்ந்த நாகரிகம், வரலாறு, தொழில், கலைகளிலிருந்து வேற்றானின் கல்வி முறை மாறுபட்டிருப்பதால் கல்வி நிலையங்களில் சிந்திக்கும் ஆற்றலையும் புரிந்துக்கொள்ளும் தன்மையையும் இழக்கச் செய்து வெறும் எதிரும் புதிருமான அந்நிய சாயல்களைக் கொண்டிருப்பதால் வாய்ப்புகளை பறிக்கும் கட்டுப்பாடுகளாக அமைந்து விடுகின்றன.

இவ்வாறு அவைகள் குழந்தைகளின் இளமைக்காலங்களிலேயே பிஞ்சு உள்ளங்களில் வேரூன்றி விடுவதற்கு எளிமையாக இருந்தாலும் பிற்கால வாழ்வில் அறிவு, சிந்தனை திறமை என்பது எல்லாம் எளிதாக மனித இயல்பில் தோன்றாது. வேற்றானின் கல்வி முறைகளின் மூலம் தாயக வெறுப்பு, புறக்கணிப்பு, நாகரிக அழிப்பு, கலைத்துறைகளின் ஒழிப்புணர்ச்சிகளை ஏற்படுத்துவது வேற்றான். வெளிப்படையாக தாயகத்தை அழிக்கும் ஆணைகளை குழந்தைகளிடத்தில் கற்பிக்கிறான் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். கற்கும் இளமை காலத்தில் இளம் உள்ளத்தில் வேர் பிடித்து வளர்ந்துவரும் வேற்றானின் ஆணைகள், வளர்ந்து வலிமையடைந்தவுடன் தாயகத்தைப் பழி வாங்கிப் பாழாக்கும் தீய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தோற்றுவித்து விடுகின்றன. தாயகத்தின் நாகரிகத்திற்கு செழிப்புள்ள தொழில்களுக்கு, முன்னோர்களின் புகழ்படைத்த கல்லறைகளுக்கு அவர்களால் வளர்த்துப் போற்றிய மாபெரும் உண்மைகளுக்கு ஒழுக்கத்திற்கு தலைகுனிந்து வணக்கம் செலுத்தாத தாயகப்பற்றற்ற—அன்பற்ற—நெஞ்சீரமற்ற

வறட்சி உள்ளத்தை உருவாக்கி விடுகிறது. வேற்றுனின் கொள்கைகளால்—கருத்துக்களால்—ஆணைகளால் வளர்க்கப்பட்ட மாணவ மாணவியர் தாயக வரலாறு, அறிவுத்துறைகள், கலைத்துறைகள், தொழிற்றுறைகளைப் போற்றி வளர்க்கமாட்டார்கள். அவர்கள் இளமையிலிருந்து எதற்கு யார் நோக்கங்களுக்காகப் பயிற்றுவிக்கப் பட்டார்களோ அதன் வழி-அவர்கள் ஆணைவழி நடப்பதற்கும் வாழ்வதற்கும் வெகு எளிதில் முனைந்து விடுவார்கள்.

தாயக அரசாங்கம் நாட்டையும் மக்களையும், உள்ளத்தோடு மண்ணையும்-மண்ணோடு மக்கள் உள்ளத்தையும் பிணைத்து மண்ணின்-மண்ணில் தோன்றிய ஒவ்வொரு பொருளின் அணுவும் மக்களின் உடலின் ஒவ்வொரு அணுவோடும் தொடர்புகொண்டு மண்ணுக்காக மக்கள்-மக்களுக்காக மண் என்று பிரிக்கமுடியாத உண்மைகளால்—கற்றால் பிணைத்து வைக்க முனைந்தால் கல்வித் துறையில் எச்சரிக்கையாகவும் தூய்மை நெஞ்சத்துடனும் தாயகப் பற்றுடனும் மக்களையும் மண்ணையும் மதிப்பவர்களாக இருக்க வேண்டும், கல்வி முறைக்கும் இனத்தின் கனவு, ஆர்வம் ஆற்றல் இவற்றிற்கும் முரண்பாடுகள் மிகுதியாக வளர்ந்து நாட்டைப் பாழடிக்கும் கொடிய கோட்பாடுகளும் வன்மைகளும் கல்வி நிலையங்களின் வாயிலாக, முளைத்தெழுந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். முன்னோர்களின் ஆணைகள், உண்மைகள், ஆர்வங்களின் எதிரொலி பீடங்களாக நிகழ்கால தலைமுறையினரின் அற்புதக்கனவுகளின் — சிந்தனைகள் பிறப்பிடமாக எதிர்கால தாயகத்தை உருவாக்கும் வண்மைகளின் நிலைக்களமாகக் கல்வி நிலையங்களை வேற்றின தன்மைகள் குடிக்கொள்ளாமல் பாதுகாக்கவேண்டும். தாயகத்து முந்தையரின் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக எதிரொலித்துக் கொண்டிருக்கும் புகழ்மிக்க உண்மைகளை குழந்தைகள் முதன் முதலாகச் செவிகொடுத்துக் கேட்கும் தெய்வீகத்தன்மை வாய்த்தவைகளாகக் கல்வி நிலையங்கள் இருக்கின்றன. என்பதை நினைந்து வேற்றினத்தின் ஆதிக்கக் கறைபடிந்து மாசடைந்து விடாமல் வைத்திருக்கவேண்டும்.

வளமான கல்வி முறையும் அமைப்பும் உருவாக வேண்டுமானால் அந்நாட்டின் தொன்னெடுங்கால தொடர்பில் வரலாற்றின் ஒவ்வொரு குறிப்பிட்ட காலக்கட்டங்களில் இனம் அடைந்திருக்கும் வளர்ச்சி, தொழில்கள், கலைகள், அறிவுத்துறைகள், வரலாற்றில் நாகரிகத்தின் தொடர்ந்த வளர்ச்சிக் கூறுபாடுகளைக் கொண்டுதான் அமையும். நாட்டின் இயற்கை வளத்தில் மனித மூளை, உடல் உழைப்பால் உருவான இன வளர்ச்சி போக்குகளின் உண்மை தெளிவான உருவங்களிலிருந்துதான் கல்வித் துறைகள் பெருக முடியும். நாட்டின் இயற்கை வளமும்—மக்கள் வாழ்க்கை வளர்ச்சியும் இல்லையானால் வெறும் மூளையாராய்ச்சி ஒன்றைமட்டும் அடிப்படையாகக்கொண்டு வளமான கல்விமுறை அமைப்பை ஏற்படுத்தி

விட முடியாது. வாழ்க்கைக்கு இன்றியமையாத எல்லாத்துறைகளையும் மக்கள் உருவாக்கி வளர்த்து காலப்போக்கில் அறிவு, சிந்தனை, ஆய்வுகளால் நிறைந்த உண்மைகள்—அனுபவங்களை அத்துறைகளில் குவிந்திருக்கவேண்டும். இந்த உண்மைகளுக்கும் அனுபவங்களுக்கும் அவ்வக்கால மக்களின் அறிவு, தேவை, தொழில்கள், வாழ்க்கைநிலை, சூழ்நிலை இவைகள் முக்கிய கூறுபாடுகளாக அமைகின்றன. கல்வி முறையில்—அமைப்பில் நிகழ்காலம் எதிர்காலத்து உண்மைகள் என்பன கனவு நிலையான சிந்தனைகளேயன்றி ஆழ்ந்த உண்மைகளும் அனுபவங்களுமாகா. அவைகள் செயல் முறைகளுக்கு வந்தபின்னரே உண்மைகளும் பயன்களும் அனுபவங்களின் தன்மைகளும் நன்கு விளங்கும்.

வாழ்க்கை, தொழில் துறைகள், அறிவுத்துறைகள் பெருகிய வளர்ச்சியிலிருந்துதான் நாகரிகச் சிறப்பும் பண்பாட்டு வளமும் அமைகின்றன. இவைகள் எல்லாம் ஒரு நாட்டின் இயற்கை எல்லைக்குட்பட்ட சூழ்நிலைக்கும் மக்களியல்புக்கும் ஏற்றவாறு சிறப்படைகின்றன. இயற்கையை வாழ்க்கை நன்மைகளுக்கேற்ப பயன்படுத்திக்கொண்ட முறைகளிலிருந்தும் இயற்கையில் பிரபஞ்சத்தைப் புரிந்துகொண்ட கூறுபாடுகளின் விளக்கங்களிலிருந்தும் கல்விமுறை அமையும் சிறப்பும் செழுமையும் ஒளிர்ந்து விளங்கும். இவற்றை வளர்த்து வளமாக்கும் பகுத்தறிவும் ஆராய்ச்சிகளும் பல உண்மைகளையும் பயன்களையும் தோற்றுவித்து கல்விவளர்ச்சியை விரிவடைய செய்கிறது.

ஒரு நாட்டின் மக்களின் இனவாழ்வின் தொடர்ந்த வரலாறு, வாழ்க்கை வளமை, அறிவுத்துறைகள் இவைகளிலிருந்து கல்வித்துறையில் மூன்று விதிகள் உள்ளடங்கி கல்வி அமைப்பாக விளங்குவதைக் காணலாம். அவைகளில் (1) அமைப்பு (2) முறை (Syllabus) (3) பயன் என்ற மூன்று விதிகளை உட்கொண்டு விளங்குவதே கல்வி அமைப்பின் உண்மை விளக்கமாகும்.

(1) அமைப்பு: அமைப்பு என்பது ஒரு நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாது அமைந்த எல்லா வகை தொழில்துறைகள், அறிவுத்துறைகள், கலைத்துறைகள் பற்றியவற்றின் பிரிவுவகையான கட்டிடங்களை அமைத்தல்; தாய்மொழியை பயிற்சிமொழியாக அமைத்தல்; கற்பிக்கும் வன்மையுடைய ஆசிரியர்களை அமைத்தல்; கற்கும் மாணவர்களின் தொகை; கல்வி கற்க கற்பிக்க இன்றியமையாத கருவிகளை அமைத்தல்; பட்டப்பிரிவு வகைகள் ஆகிய இவைகள் அமைப்பு என்ற விதியிலடங்கி கல்வி அமைப்பு நிலை உறுதியாகவும் செம்மையானதாகவும் விரிந்தஅளவில் நாடெங்கும் பரந்த அளவில் விளங்குவதாகும். இந்த அமைப்பு என்பது கல்விமுறைக்கு இன்றியமையாத கருவிகள் என்றும் சொல்லலாம் இவற்றுள் பயிற்சிமொழி கல்விபயிலக் கருவியாக இருப்பதால் தாய்மொழியைப்பயிற்சிமொழியாக அமைத்துவிடுவதுசாலச்சிறந்ததாகும்.

ஒரு நாட்டின் மக்களின் தொழில், அறிவு, கலைகள், நாகரிகம் யாவையும் தாய்மொழியைக் கருவியாக கொண்டே வளர்ந்துவருவதால் அந்நாட்டின் இயற்கை நிலைமைகளிலிருந்து கல்விமுறையை அமைக்கும்போது தாய்மொழிப்பயிற்சி கருவியாக அமைவது இயல்பு. தாய்மொழியைப் பயிற்சி மொழியாக அமைப்பது செயற்கையன்று; இயற்கை விதியாக விளங்குகிறது. அமைப்பு விதியில் எதிர்காலத்தில் மாணவர்கள் நாட்டின் குடிகளாக வாழும்போது கட்டுப்பாடு, ஒற்றுமை, அமைப்பாக வாழவேண்டியிருப்பதால் தாய்மொழி வாயிலாக அதை கல்விநிலையங்களிலேயே உருவாக்கிவிடுவது இயல்பு. மாணவர்களுக்குக் கல்வி பயில்வதற்கு எளிய கருவியாகவும் இளமையிலிருந்தே உணர்வுகளோடு கலந்த மொழியாகவுமிருப்பதால் தாய்மொழிப்பற்றை மிக எளிதில் தோற்றுவித்துவிடும்; தாய் மொழிப்பற்று என்பது இனத்தின் ஒற்றுமை கட்டுக்கோப்பு என்ற ஆழ்ந்த பொருளையுடையது என்று நினைவில்கொண்டு தாய் மொழியை அமைப்பு விதியிலேயே பயிற்சி மொழியாக அமைத்துவிட வேண்டும்.

(2) முறை (Syllabus): கல்வி அமைப்பில் முறையென்பது முக்கிய விதியாக அவற்றின் அமைப்புக்கே உயிர் இயக்கமாக இருப்பதாகும். ஒரு நாட்டின் இனத்தின் வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்தும் பொருளாதார வளர்ச்சிகளிலிருந்தும், அரசியல் ஆட்சி முறைகளிலிருந்தும் இலக்கியப் படைப்புகளிலிருந்தும், விஞ்ஞானப் படைப்புகளிலிருந்தும் மருத்துவ வளர்ச்சியிலிருந்தும் நீதிமுறைகளிலிருந்தும், நாகரிகம், கலைத்துறைகள், தொழில்துறைகள், அறிவுத் துறைகள், இனவியல் வளர்ச்சியிலிருந்தும் நாட்டின் இயற்கை அமைப்புகளிலிருந்தும் பூகோள அமைப்பிலிருந்தும் இன்னும் பிற இன்றியமையாத வாழ்க்கைத்துறைகளிலிருந்தும் பாடமுறைகளை பட்டப் பிரிவுகளை உருவாக்கி நாட்டின் தனித்துவத்தையும் பெருமையும் புகழையும் நிலைநாட்டி வளர்த்துப் பாதுகாப்பதாகும். இந்தப் பாடமுறைகளோடு—பட்டப் பிரிவுகளோடு அவ்வவற்றிற்குரிய ஆராய்ச்சி முறைகளிலிருந்து அவ்வப்போது வளர்ந்துவரும் உண்மைகளைப் பாடமுறைகளோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். கல்வி முறையை உருவாக்கும் செயலில்தான் நாடும் அரசும் கல்வித்துறையினரும் மக்களும் அறிஞர்களும் மிக்க எச்சரிக்கையுடனும் கடுமையுடனும் கவனத்துடனும் தாயகப் பற்றுடனுமிருக்க வேண்டும். கல்விமுறையில்தான் ஒரு நாட்டின் தனித்துவ மிக்க உயிர்துடிப்பே உள்ளடங்கி இருக்கிறது என்பதை உணரவேண்டும்.

(தொடரும்)